
வாராந்த சஞ்சிகை

ஜூலை 01 - 07, 2015

# சுடர் ஒளி

பக்கம் 24

விலை 30/-





# கலைந்து போகாத கனவுகள்






# மலசலகூட கடதாசியில் மணப்பெண் ஆடை

அமெரிக்க நியூயோர்க் நகரைச் சேர்ந்த நவநாகரிக கண்காட்சி ஏற்பாட்டு நிறுவனமொன்றால் நடத்தப்பட்ட நவநாகரிக கண்காட்சியில் யுவதிகள் மலசலகூடத்தில் பயன்படுத்தப்படும் கடதாசிகள் மூலம் வடிவமைக்கப்பட்ட கண்ணைக் கவரும் அலங்கார மணப்பெண் ஆடை களை அணிந்து வலம் வந்து பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளனர்.

மலிவான மலசலகூட கடதாசியாலான மணப்பெண் ஆடைகளுக்கான 11 ஆவது வருடாந்த போட்டி நிகழ்ச்சியிலேயே யுவதிகளின் இந்த அலங்கார அணிவகுப்பு இடம்பெற்றது.

மலசலகூட கடதாசிச் சுருள்கள், ஒட்டுப் பசை, நாடாக்கள் மற்றும் நூல்கள் என்பவற்றைப் பயன்படுத்தி இந்த மணப்பெண் ஆடைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் போட்டி நிகழ்ச்சியில் தென்னஸி மாநிலத்தில் பிரென்ட்வூட் எனும் இடத்தைச் சேர்ந்த டோனா போப் விங்கிளேயர் என்ற நவநாகரிக ஆடை வடிவமைப்பாளரால் உருவாக்கப்பட்ட மலசலகூட கடதாசியாலான மணப்பெண் ஆடை முதலிடத்தைப் பெற்று 10,000 அமெரிக்க டொலர் பெறுமதியான பரிசை வென்றுள்ளது.

அவர் இந்த ஆடை உருவாக் கத்திற்காக 22 மலசலகூட கடதா சிச் சுருள்களைப் பயன்படுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பெண் உருவத்தில் பூக்கள் மலரும் அதிசய மரம்

தாய்லாந்து நாட்டிலே ஒரு அதிசய மரத்தில் பெண் உருவத் l _ Â ï Nareepol என்றழைக்கப்படுகிறது. இது தாய்லாந்து நாட்டில் உள்ள பாங்கொங் ந்கரத்திலிருந்து 500 கிலோமீற்றர் தொலைவில் உள்ள Petchaboon province என்ற இடத்தில் உள்ளது. இந்த மரத்தில் பெண் உருவத்தில் பூக்கள் பூக்கின்றன.

அதனால்தான் இந்த மரம் Nareepol எனப்படுகிறது. Naree என்றால் மலாய் மொழியில் பெண் என்றும் Pol என்றால் மரம் என்றும் பொருள் தருகிறது.







# யாருக்குச் சொந்தம்?

- வேல் தர்மா

அமெரிக்காவில் வசிப்பவர்களும் அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர்களுமான ஒரு யூதத் தம்பதிகளுக்கு ஜெருசலம் நகரில் பிறந்த மெனக்கெம் ஜிவொடொஃப்ஸ்கி (Menachem Zivotofsky) என்னும் மகனின் கடவுட் சீட்டில் அவர் பிறந்த நாடு இஸ்ரேல் எனக்குறிப்பிட வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்க அரசால் நிராகரிக்கப்பட்டது.

அதை எதிர்த்துப் பெற்றோர்கள் தொடுத்த வழக்கு அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம் வரை சென்றது. அதில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜெருசலம் இஸ்ரேலுக்குச் சொந்தமானது அல்ல என குடியரசுத் தலைவர் சொல்வதில் தலையிடும் அதிகாரம் அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு இல்லை எனத் தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இரு வகையில் முக்கியத்துவம் பெற்றது. முதலாவது ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவரின் செயற்பாட்டில் எந்த அளவு தூரம் அதன் நாடாளுமன்றம் தலையிடலாம் என்பது.

இரண்டாவது ஜெருசலம் தனக்குச் சொந்தமானது என இஸ்ரேல் சொல்லுவது எந்த அளவிற்கு உண்மையானது. ஏப்ரகாமிய மதங்கள் எனக் கருதப்படும் யூத மதம், கிருஸ்த்தவ மதம், இஸ்லாமிய மதம் ஆகிய மூன்றிற்கும் ஜெருசலம் நகர் முக்கியமானதாகும்.

2002ஆம் ஆண்டு அமெரிக்க நாடாளுமன்றம் ஜெருசலத்தில் பிறந்த அமெரிக்கர்களின் கடவுச்சீட்டில் அவர்கள் விரும்புமிடத்து அவர்களின் பிறப்பிடம் இஸ்ரேல் எனக் குறிப்பிடலாம் எனக் கடவுட்சீட்டுச் சட்டத்தை இயற்றி இருந்தது.

இஸ்ரேலியர்களுக்கு என ஓர் அரசும் பலஸ்த்தீனியர்களுக்கு என ஓர் அரசும் இருக்க வேண்டும் என்பது ஐக்கிய அமெரிக்கா நீண்டகாலமாக வெளிப்படுத்தும் ஒரு நிலைப்பாடாக இருந்தது.

அதே வேளை ஜெருசலம் இந்த இரு அரசுகளுக்கும் சொந்தமில்லாத ஒரு தனிப்பிராந்தியமாக ஐக்கிய அமெரிக்க அரசு கருதி வருகின்றது.

அமெரிக்காவின் இரு கட்சிகளையும் சேர்ந்த குடியரசுத் தலைவர்கள் இதே நிலைப்பாட்டிலேயே இருந்தனர். 2002 ஆம் ஆண்டு அமெரிக்க நாடாளுமன்றம் நிறைவேற்றிய கடவுச்சீட்டுச் சட்டத்தில் கையொப்பமிட்ட ஜோர்ஜ் புஷ் அந்தச் சட்டத்தில் உள்ளது போல் ஜெருசலத்தில் பிறந்த அமெரிக்கர்கள் விரும்புமிடத்து அவர்களின் பிறப்பிடம் இஸ்ரேல் எனக் குறிப்பிடப்படுவதைத் தான் நிறைவேற்றப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

அமெரிக்கப் நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டம் அமெரிக்க அரசமைப்பு குடியரசுத் தலைவருக்கு வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக வழங்கிய உரிமையை மீறுவது என்பது பரவலான கருத்தாக இருக்கின்றது.

அவருக்குப் பின்னர் குடியரசுத் தலைவர் பதவிக்கு வந்தவர்களும் இதே நிலைப்பாட்டிலேயே இருந்தனர்.

தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளில் ஒருவர் கடவுட்சீட்டு என்பது அமெரிக்க வெளியுறவுத் துறைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையிலான கடவுட்சீட்டுக்குரியவர் தொடர்பான தகவல் பரிமாற்றப் பத்திரம் என்றும் அதில் என்ன தகவல் இருக்க வேண்டும் என்பதை குடியரசுத் தலைவர் மட்டுமே தீர்மானிக்க முடியும் என்றார்.

ஜெருசலம் நகர்தான் தனது நாட்டின் தலைநகர் என இஸ்ரேல் அறிவித்த போது எந்த ஒரு நாடும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

இஸ்ரேலுடன் தூதரக உறவைக் கொண்ட நாடுகள் எல்லாம் தமது தூதரகங்களை டெல் அவீவில் மட்டுமே திறந்தன.

**பலஸ்த்தீனியத் தேசியவாதம்**

பலஸ்த்தீனம் என்ற சொல் இடம்விட்டு இடம் நகரும் மக்கள் எனப் பொருள்படும். கிரேக்கர்கள் முதலில் பலஸ்த்தீனம் என்னும் பெயரால் ஜோர்தான் நதிக்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடையில் உள்ள பிரதேசத்தை அழைத்தனர்.

அப்பிரதேசம் இப்போது இஸ்ரேல், மேற்குக்கரை, காஸா நிலப்பரப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். பிரித்தானிய ஆட்சியின்போது யூதர்களுக்கு என இஸ்ரேல் என்ற ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்ற கருத்து தோன்றிய போது பலஸ்த்தீனியர்கள் என்றபதம் பரவலாகப் பாவிக்கப் படத் தொடங்கியது.

1947 ஆம் ஆண்டு இஸ்ரேல் உருவான ஓராண்டின் பின்னர் அரபு லீக் உறுப்பு நாடுகளான சிரியா, ஈராக், எகிப்து, ஜோர்டான் இஸ்ரேல் மீது படையெடுத்தன.

இந்தப் போரின் போது பெத்தெலேகம் நகரை ஒரு பகுதியாகக் கொண்ட ஜெருசலத்தை ஜோர்தான் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

இதன் பின்னர் அரபுநாடுகள் பலஸ்த்தீன மக்களுக்கு எப்படியான தீர்வு வேண்டும் என்பதில் அரபு நாடுகள் முரண்பட்டுக் கொண்டன. பலஸ்த்தீனம் தனது நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் எனச் சொன்னது ஜோர்தான்.

பலஸ்த்தீனம் வரலாற்று ரீதியாக தன்னுடைய நாட்டின் ஒரு பகுதி என அடம்பிடித்தது சிரியா. சில நாடுகள் பலஸ்த்தீனம் தனிநாடாக இருக்க வேண்டும் எனக் கருதின.

மாறாக யசீர் அரபாத் ஜோர்தான் பலஸ்த்தீனத்தின் ஒரு பகுதி எனக் கருதினார். பலஸ்த்தீன விடுதலை இயக்கமும் முஸ்லிம்களிடையே பிளவுகளை உருவாக்கியது.

ஈரான், பலஸ்த்தீனம் தொடர்பான தீர்வுகளில் தனக்கும் பங்கு உண்டு என்றது. காஸா நிலப்பரப்பு எகிப்தின் கீழ் இருந்ததையும், மேற்குக்கரை ஜோர்தானின் கீழ் இருந்ததையும் பலஸ்த்தீன விடுதலை இயக்கம் கடுமையாக எதிர்த்தது.

1967ஆம் ஆன்டு நடந்த அரபு இஸ்ரேலியப் போரின் பின்னர் பலஸ்த்தீனியர்கள் ஜோர்தான், லெபனான் போன்ற நாடுகளிற்கு இடம்பெயர்ந்தனர்.

**இஸ்ரேலின் உருவாக்கம்**

தான் ஆட்சி செய்த நாடுகளுக்கு சுதந்திரம் கொடுத்து அந்த அந்த நாடுகளை அந்த நாட்டு மக்களே ஆளும்படி செய்த பிரித்தானியா பலஸ்தீனத்தின் ஆட்சிப் பொறுப்பை ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளித்தது.

பலஸ்த்தீனத்தில் ஒரு இஸ்லாமிய அரசு உருவாகாமல் தடுக்கும் நோக்கத்துடன் இப்படிச் செய்யப்பட்டது. புனித பெத்தேலேகம் இஸ்லாமிய அரசிடம் அகப்படக்கூடாது என்பதே எண்ணம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்த்தீனத்திற்கான சிறப்பு ஆணைக்குழுவின் (UNSCOP) பரிந்துரையின் படி ஐநா தீர்மானம் 181இன் மூலம் பலஸ்த்தீனம் இரு நாடுகளாகப் பிரிப்பதாக முடிவு செய்யப்பட்டது.

அதன் படி யூதர்கள் இஸ்ரேலை தனி நாடாகப் பிரகடனப் படுத்தினர். அப்போது பலஸ்த்தீனத்தின் 85வீதமான நிலம் அரபு பலஸ்த்தீனியர்களிடமும் 7 வீதமான நிலம் யூதர்களிடமும் இருந்தது.

தீவிர சியோனிச வாதியான இஸ்ரேலின் முதல் தலைமை அமைச்சரான டேவிட் பென் குயோன் தமக்கென ஓர் அரசு உருவானால் தம்மால் முழுப் பலஸ்த்தீனத்தையும் ஆள முடியும் என ஏற்கனவே சொல்லியிருந்தார். தீர்மானம் 181ஐ அரபு நாடுகள் கடுமையாக எதிர்த்தன.

தமது எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் இஸ்ரேல் என்னும் நாடு ஒரு தலைப்பட்சமாக யூதர்களால் பிரகடனப் படட்து என்றனர் அரபு மக்கள்.

**அரபுக்களின் ஆத்திரம்**

இஸ்ரேல் என்ற நாடு தமக்கு மத்தியில் உருவானதை அரபு

(20 ஆம் பக்கம் பார்க்க)




ஒவ்வொரு நாளும் உலகை அதிரவைத்துக்கொண்டிருக்கும், ஈராக்கையும் சிரியாவையும் பதறவைத்துக்கொண்டிருக்கும் ஐ.எஸ்.ஸின் தலைவராக இருந்த அல்-பக்தாதி குண்டுத்தாக்குதலில் காயமடைந்துவிட்டாராம்.

ஐ.எஸ். அமைப்பின் தலைவர், அமெரிக்காவின் வான் தாக்குதலில் காயமடைந்ததாக அண்மைக்காலங்களில் சர்வதேச ஊடகங்கள் பரபரப்பாக செய்தி வெளியிட்டுக்கொண்டிருந்தன.

ஆனால் அந்தச் செய்தி பொய் என்றும் ஒரு சிலர் மறுத்துவந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் அது உண்மைதான் என்பதைப்போல தகவல்கள் கசிகின்றன.



ஐ.எஸ்.அமைப்பின் தலைவராக அபு பகர் அல்- பக்தாதி (AlBaghdadi) இருந்தார்.

அவர் கடந்த மாதம் மேற்கு ஈராக் பகுதியில் பதுங்கியிருந்த போது அமெரிக்க கூட்டுப் படைகள் ஐ.எஸ்.ஸை குறிவைத்து குண்டு வீச்சு நடத்தியது.


இந்தத் தாக்குதலில் ஐ.எஸ். இயக்கத் தலைவர் அபுபகர் அல் பக்தாதி படுகாயம் அடைந்தது உண்மைதானாம்.

உயிருக்குப் போராடும் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறதாம். எனவே அவரால் பணியாற்ற முடியாமல் இருப்பதாகவும் சொல்கிறார்கள்.

அதனால் ஐ.எஸ். அமைப்புக்கு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாராம்.

பக்தாதி காயமடைந்ததை அடுத்து ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தை வழிநடத்த தற்காலிகமாகத்தான் புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் சொல்கின்றன.

இந்தத் தகவலை ஈராக் அரசு ஆலோசகர் டாக்டர் ஹிசம் அல்-ஹஷிமிதான் (Iraqi government advisor Dr Hisham Al Hashimi)



அபு அலா அப்ரி

தெரிவித்துள்ளார்.

ஒரு வேளை அல்-பக்தாதி இறந்துவிட்டால் தற்போது தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் அப்ரி தொடர்ந்து தலைவராக இருப்பார் என்ற தகவலும் கிடைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

புதிய தலைவராக அறிவிக்கப்பட்டுள்ள அப்ரி ஈராக்கின் மொசூல் நகரை சேர்ந்தவர். தல் அபர் நகரில் உள்ள பள்ளியில் இயற்பியல் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார்.

இவரை ஹாஜி இமான் என்றும் அழைப்பார்களாம். இவர் அல்- பக்தாதியின் வலது கரமாக திகழ்ந்தவராம்.

**சரி இந்த ஐ.எஸ். அமைப்பை யார் உருவாக்கினார்கள்?**

ஒவ்வொரு தகவலும் ஒவ்வொரு மாதிரி சொல்கின்றன. இதில் புதிய தகவல் ஒன்று இப்படிச் சொல்கிறது.

இந்த இயக்கத்தை உருவாக்கி அதன் மூளையாக செயற்பட்டது சதாமின் ஆட்சிக் காலத்தில் ஈராக் உளவுத்துறை அதிகாரியாக பணியாற்றிய சமீர் அப்த் முகமது அல் கலிஃபா தான் என ஜெர்மன் நாட்டின் www.spiegel.de என்ற இணையத் தளம் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் 31 பக்க ஆவணங்களை பெற்றுள்ளது. கையால் எழுதப்பட்டுள்ள அந்த ஆவணங்களில் ஐ.எஸ். இயக்கத்தின் செயற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என விவரிக்கப்பட்டுள்ளது.

www.spiegel.de இணையத்தளம் வெளியிட்டுள்ள கட்டுரையில்...

ஈராக் அதிபராக சதாம் இருந்த போது விமானப் படையின் உளவுப் பிரிவு அதிகாரியாக இருந்தவர் சமீர் அப்த் முகம்மது அல் கலிஃபாவி. (Samir Abd Muhammad AlKhlifawi,) இவர்தான் ஐ.எஸ். இயக்கத்தின் மூளையாக கருதப்படுகிறார்.

இவரைத்தான் ஹாஜி பக்கர் என ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் அழைக்கிறது. சதாமின் ஆட்சிக் காலத்தில் எப்படியெல்லாம் அரசு இயந்திரம் இயங்கியதோ அதே பாணியில்தான் அதாவது கடத்தல், படுகொலை என்ற பாணியில் சிரியாவின் வடபகுதியை ஆக்கிரமித்துள்ளது ஐ.எஸ்.

தமது கைப்பட ஐ.எஸ். இயக்கத்தை எப்படி கட்டமைக்க வேண்டும்; யார் யாருக்கு என்னென்ன பொறுப்புகள். இயக்கத்துக்கான நிதியை எப்படி திரட்டுவது என்பதை எழுதியிருக்கிறார் ஹாஜி பக்கர்.

2006ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் தடுப்புக் காவலில் இருந்தவர் ஹாஜி பக்கர். 2010ஆம் ஆண்டு பக்கரும் ஈராக் முன்னாள் உளவுத்துறை அதிகாரிகளும் அபு பக்கர் அல்-பக்தாதியை இஸ்லாமிய தேசத்தின் அதிகாரப்பூர்வ தலைவராக உருவாக்கினார்கள்.

2012ஆம் ஆண்டு வடக்கு சிரியாவில் நகரங்கள் ஆக்கிரமிக்கப்படுவதை பார்வையிடுவதற்காக ஹாஜி பக்கர் சென்றார்.

அதன் பின்னர் சவூதி அரேபியா, துனிசியா, செச்சேனியா, உஸ்பெகிஸ்தான் என வெளிநாடுகளில் இருந்து தீவிரவாதிகளை இணைக்கும் திட்டத்தை செயற்படுத்தியவரும் ஹாஜி பக்கர்தானாம்.

2014ஆம் ஆண்டு சிரியாவில் நடைபெற்ற மோதலில் ஹாஜி பக்கர் கொல்லப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது. ஹாஜி பக்கர் கொல்லப்பட்ட பின்னர் 2014ஆம் ஆண்டு அவர் வீட்டில் இருந்த ஆவணங்கள் துருக்கிக்கு கடத்தப்பட்டு அங்கிருந்து ஜெர்மனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இவ்வாறு அந்த இணையத்தள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இப்படி இருக்கலாம். அதற்கு வாய்ப்பும் இருக்கத்தான் செய்கிறது.

ஆரம்பத்தில் சிரியா உள்நாட்டுப் போரின்போது அங்கு நிலைகொண்டிருந்த ஐ.எஸ் அமைப்பு, அங்கிருந்து ஈராக்கினுள் முன்னேறத் தொடங்கியது.

ரமாடி, பலூஜா என ஒவ்வொரு நகரமாக இதன் கட்டுப்பாட்டுக்குள் விழுந்தன. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மொசூல் இவர்களின் பிடிக்குள் போனபோது உலகம் அதிர்ந்தது.

இதைத் தொடர்ந்து சதாமின் சொந்த ஊரான திக்ரித் மற்றும் சமாரா, ஜலாலா, அல் அண்பார் ஆகிய பகுதிகளும் ஐ.எஸ். வசம் விழுந்தன. தொடர்ந்து பாக்தாத் நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

சிரியாவின் பல பகுதிகளும் இவர்களின் வசம் சென்றுவிட்டன. எகிப்தின் சில பகுதிகளிலும், லிபியாவின் கிழக்குப் பகுதிகளிலும் ஐ.எஸ் ராஜ்ஜியம்தான். இப்படி தங்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை இஸ்லாமிக் ஸ்டேட்' என அறிவித்துள்ள ஐ.எஸ் அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல்-பஹ்தாதி, இந்த அரசின் மன்னராகவும் தன்னை அறிவித்துள்ளார்.

இதை உலகின் எந்த இஸ்லாமிய அமைப்பும் ஏற்கவில்லை என்பது ஒரு பக்கம் இருக்க், உண்மையில் ஐ.எஸ் முன்வைக்கும் இஸ்லாமிக் ஸ்டேட்'



ஹாஜி பக்கர்

என்பது பரந்து விரிந்தது. ஸ்பெயின், இந்தோனேஷியா, இந்தியா என தனித்தனியான மூன்று கண்டங்களைச் சேர்ந்த நாடுகளை வளைத்துச்செல்கிறது அதன் வரைபடம்.

இந்த அமைப்பில் ஜிகாதிகளாகச் சேர விரும்புவோருக்கு, தேச எல்லைகள் ஒரு நிபந்தனை அல்ல. இதனால் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் ஐ.எஸ்-ஸில் இணைய ஆர்வம் காட்டிவருகிறார்கள்.

கொலைகளும் மரணங்களும் போர்களும் நமக்கு புதியவை அல்ல. உலகின் ஏதோ ஒரு மூலையில் நடைபெறும் குண்டுவெடிப்புகள் குறித்தும் மனிதச் சாவுகள் குறித்தும் அன்றாடம் செய்திகள் வந்துகொண்டுதான் இருக்கின்றன.

அவை நம் உணர்வுகளை மரத்துப்போக வைத்துவிட்டன.


சிதறிய உடல்களும் ரத்த சிவப்பான நிலமும் நமக்குப் பழகிவிட்டன.

இதையெல்லாம் தினசரி செய்திகளின் ஊடாக நாம் கடந்து செல்கிறோம்.

ஐ.எஸ் அமைப்பின் கொலைகள் வேறுபட்டவை. அவர்களிடம் நவீன ஆயுதங்கள் இல்லாமல் இல்லை. சொல்லப்போனால் உலகின் பல நாடுகளின் இராணுவங்கள் பயன்படுத்தும் நவீன ரக ஆயுதங்கள் அவர்களிடம் இருக்கின்றன.

(தொடரும்)

# காமுகன் கவர்ந்த பூவை கசங்காது காத்த மக்கள்



ஒவ்வொரு தாய்மார்கள் சார்பிலும் நான் இதை உங்களிடம் கேட்கின்றேன். இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை, சட்டத்தின் முன் நிறுத்தி மரணதண்டனை வழங்குங்கள்.

அதனை விடுத்து இவர்களைக் கைது செய்து, மீண்டும் பிணையில் வெளியில் விடுவதால் தான், இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்ந்து எமது நாட்டில் நடைபெற்ற வண்ணமே இருந்து வருகின்றன.

இதுபோன்ற சம்பவங்களினால் இந்த நாட்டிலுள்ள தாய்மார்களுக்கு இனிமேலும், இவ்வாறு தங்கள் பெண்பிள்ளைகளுக்காக கண்ணீர் சிந்தும் நிலைமைகள் தொடராதிருக்க, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்குங்கள். இவ்வாறு கண்ணீர் விட்டவாறு சிறுமியின் தாயார் தெரிவித்தார்.

மானிடராய்ப் பிறந்திடவே, மா தவம் செய்திட வேண்டும் என்று பாடிச் சென்றார் பாரதி. ஆனால் நடைமுறை யில் பெண்கள் தமது சுய மதிப்பையும், கௌரவத்தையும் இழந்து, அன்றாடம் பல்வேறு பாலியல் துஷ்பிரயோகச் செயல்களுக்கு பயன்படுத்தப்படும் அற்ப பொருளாக மாறி வருகின்றார்கள்.

பால் வடியும் குழந்தை முதல் தோல் சுருங்கிய வயதான பாட்டி வரை எவ்வித வயது வித்தியாசமின்றி காமவெறி கொண்ட காடையர்களிடம் அன்றாடம் சிக்கி சின்னாபின்னமாகின்றனர்.

அதுவும் பள்ளி வாழ்வில் சுதந்திரமாய் துள்ளித் திரியும் பசுந்தளிர்கள் பல, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு இறுதியில் சக்கைத்துண்டுகளாய் ஆங்காங்கே காடுகளிலிருந்தும், புதர்களிலிருந்தும் கண்டெடுக்கப்படுகின்றார்கள்

அந்த வகையில் புத்தளம், தில்லையடிப் பகுதியில் 7 வயதே நிரம்பிய சிறுமியொருவர் காம வெறி கொண்ட அரக்கன் ஒருவரினால் கடத்தப்பட்டுத் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்ட சம்பவமே இது.

அன்று ஜூன் முதலாம் திகதி, புத்தளம் பிரதேசத்தை வதிவிடமாக கொண்ட அனுஷா சன்ஜீவனி (வயது 40) மாதம்பே பிரதேசத்திலிருக்கும் தனது வயதான தாயைச் சென்று பார்த்து விட்டு மறுபடியும் புத்தளம் செல்லும் நோக்கத்துடன், 10.45 மணியளவில் கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கிச் செல்லும் புகையிரத்தில் ஏறினாள்.

அந்தப் புகையிரதம் சரியாக பி.ப. 12.30 மணியளவில் புத்தளம் புகையிரத நிலையத்தை அண்மித்தது.

எனவே, புத்தளம் புகையிரத நிலையத்தில் இறங்கும்போது எவ்வித பதற்றமுமின்றி இறங்குவதற்காக, கொண்டு வந்த பொருட்களை எல்லாம் எடுத்து தனதருகில் வைத்துக் கொண்டு ஆயத்தமானாள்.

அதன்பின் எதிர்பாராத விதமாக யன்னல் கதவின் ஊடாக வெளியில் அவதானிக்கும் போதே புத்தளம் புகையிரத நிலையத்தை அண்மித்த தில்லையடி காட்டுப்பிரதேசத்தில் அனுஷாவுக்கு நன்கு தெரிந்த டோனி என்பவரின் இரட்டைக் குழந்தைகளில் ஒருவரை இனம் தெரியாத நபரொருவர் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு காட்டுப் பிரதேசத்துக்குள் செல்வதை அவளால் அவதானிக்க முடிந்தது.



எனவே இச்சிறுமி எதற்காக இந்த நபருடன் செல்கின்றாள்? அதுவும் இந்த அடர்ந்த காட்டுச் பகுதிக்குள் ஏன் செல்ல வேண்டும்? என்று அவளுக்குள் ஒரு சந்தேகம் எழுந்தது.

அதனைத் தொடர்ந்து தனக்குள் ஏற்பட்ட சந்தேகத்துக்கு உடனே விடை காணும் முகமாக புகையிரத வண்டியிலிருந்தவாறே அச்சிறுமியின் தாய்க்கு தொலைபேசி அழைப்பு ஒன்றை ஏற்படுத்தினாள்.

ஹலோ! நான் அனுஷா கதைக்கின்றேன். உங்களுடைய இரட்டைக் குழந்தைகளில் ஒருவரை தில்லையடி பிரதேசத்திலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் இனம் தெரியாத நபரொருவர் அழைத்துக் கொண்டு செல்வதைக் கண்டேன் என்று மேற்படி தகவலை அச்சிறுமியின் தாய்க்கு அனுஷா தெரிவித்தார்.

சிறுமியின் தாய்க்கு வழமைக்கு மாறாக இதயம் படபடக்க ஆரம்பித்தது.

உடனே அவருடைய கணவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி இது தொடர்பாக அறிவித்தாள்.

இதனைத் தொடர்ந்து சிறுமியின் தந்தை தனது மோட்டார் சைக்கிளில் மின்னல் வேகத்தில் 4 கிலோ மீற்றர் தொலைவிலிருந்த சிறுமி கல்வி கற்கும் அநாகரிக தர்மபால வித்தியாலயத்தை வந்தடைந்தார்.

அதன்பின் பாடசாலை வளாகத்தில் வழமையாக தன்னைக் கண்டதும் அப்பா என்று அழைத்தவாறே துள்ளிக் குதித்து ஓடி வரும் தனது ஆசை மகளின் முகத்தை காண விழைந்தார்.

எனினும் அங்கு அவருக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியிருந்தது. பாடசாலையில் எங்கு தேடியும் சிறுமி இருக்கவில்லை.

எனவே அனுஷா தனது மனைவிக்கு கூறிய விடயம் உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று மனதுக்குள் எண்ணியவாறு தில்லையடிக் காட்டுப் பிரதேசத்தை நோக்கிச் சென்றார்.

அவர் அங்கு செல்லும் போதே அனுஷா, புத்தளம் புகையிரத நிலையத்தில் இறங்கி மேற்படி சம்பவம் தொடர்பாக அனைவரையும் தெளிவுபடுத்தி, அங்கு அழைத்து வந்திருந்தார்.

அதுமட்டுமின்றி, இப்பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் வீதிப் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களும் இச்சம்பவம் தொடர்பாக அறிந்து இப்பிரதேசத்தை வந்தடைந்தனர்.

அனைவரும் இணைந்து சிறு, சிறு குழுவினராகப் பிரிந்து காட்டுப் பிரதேசத்தில் சிறுமியைத் தேட ஆரம்பித்தனர்.

புத்தளம் நகரை அண்மித்த தில்லையடிக் காட்டுப்பிரதேசமானது இலகுவில் மக்கள் நுழைய முடியாத முட்செடிகளைக் கொண்ட பிரதேசமாகும்.

அப்படியிருக்கையில், அன்று மக்கள் ஒன்று திரண்டு இக்காட்டுப் பிரதேசத்துக்குள் பிரவேசித்தது, சிறுமிக்கு எவ்வித ஆபத்தும் நேரு முன்னர் சிறுமியைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆதங்கத்துடனேயே ஆகும்.

அதுமட்டுமின்றி, அனைவருமே குழந்தைக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்து விடக் கூடாது என்று தத்தமது இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்துக்கொண்டனர்.

இதன்போது அனுஷாவும், சிறுமியின் தந்தையும் இணைந்து வேறுபக்கமாக சிறுமியைத் தேடினார்கள்.

மிக நீண்ட தேடுதலின் பின்னர் தேடுதலில் ஈடுபட்ட மக்களில் ஒரு குழுவினர் காட்டுப்பகுதியின் ஒரு மூலையிலிருந்து குழந்தை இங்கே இருக்கின்றது என்று பலத்த குரலில் சத்தமிட்டனர்.

இதனை தொடர்ந்து காட்டுக்குள் இருந்த சிறிய புதரொன்றில் மறைந்திருந்த சிறுமி தன் தந்தையைக் கண்டு அப்பா, அப்பா என்று பலத்த குரலில் கத்தியவாறே வெளியே வந்தது.

சிறுமியைக் கண்டதும் தந்தையின் மகிழ்ச்சிக்கு அளவே இருக்கவில்லை. முள், புதர், கல் என்று எதுவுமே பார்க்காது ஓடோடிச் சென்று சிறுமியை அள்ளி அணைத்து, தன் அன்பையும், வாஞ்சையையும் வெளிப்படுத்தினார்.

அதுமட்டுமின்றி, அனுஷாவுடன் தேடுதலில் ஈடுபட்ட மக்களும் சிறுமியைக் கண்டவுடன் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

இத்துடன் சிறுமியைத் தேடும் பணி நிறைவடைந்து விட்டது என்றே பலரும் எண்ணினார்கள். எனினும், அங்கு வந்திருந்த பொலிஸ் போக்குவரத்து அதிகாரிகள் சிறுமியைக் கடத்தி வந்தவர் யார் என்பது தொடர்பாக அறிய விழைந்தனர்.

அதன்படி ஒன்றுமே அறியாத சிறு பாவையொன்றை தனது அற்ப தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் கடத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை



sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609


## போதைப் பழக்கத்தை ஒழிக்க பொருத்தமான தருணம் இது

போதைப் பழக்கத்தை எம் மத்தியிலிருந்து ஒழித்துக்கட்டியாகவேண்டும் என்ற உத்வேக உணர்வு இன்று எமது சமூக மத்தியில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தலை தூக்கி உள்ளதை, சமூக மத்தியில் அண்மைய நாள்களில் பல தரப்புக்களாலும் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் உணர்த்தி வருகின்றன.

அந்த வகையில் அண்மையில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம், யாழ் றோட்டரிக்கழகம் மற்றும் வேல்ட் விஷன் அமைப்பு என்பனவற்றால் ஒழுங்கமைக்கப்பட்டு சங்கானையில் நடத்தப்பட்ட போதைப்பொருள், மதுப்பாவனைக்கு எதிரான நடைபவனி இதற்கு மைல்கல்லாக அமைந்ததாகக் கொள்ளலாம்.

மாணவச் செல்வங்களாகிய நீங்கள் இன்று ஆற்றிய பணி மிக மிக மேன்மையானது. சமுதாயம் விழிப்புணர்வு பெற, மாணவர்களாகிய நீங்கள் விழிப்புடன் இருந்து செயலாற்றினால் இன்றைய சமூகச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்தலாம்.

மதுப்பாவனைக்கெதிரான போராட்டம் இன்று ஒரு நாள் மட்டும் நடக்கக்கூடாது. அது தொடரவேண்டும். அதற்கான அறிவுறுத்தல்களை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் ஆழமாகப் பதிய வைப்பதற்கு அர்ப்பணிப்பு மிக்க நடவடிக்கைகள் அவசியம்.

மாணவர்கள் மத்தியில் மது அருந்துதல், போதைவஸ்து பாவனை, புகைத்தல் போன்ற பழக்க வழக்கங்கள் என்றுமில்லாதவாறு அண்மைய காலத்தில் ஆதிக்கம் செலுத்திவருகின்றன.

அத்துடன் கொலை, களவு, கற்பழிப்பு போன்ற சமூகச் சீரழிவுச் செயற்பாடுகள் யாழ் மாவட்டம் உள்ளடங்கலாக, சகல தமிழ் மாவட்டங்களிலும் நடைபெற்றுவருகின்றன.

இவ்வாறு நடைபவனியின் நிறைவில் உரையாற்றிய றோட்டரிக்கழக முன்னாள் தலைவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை,

திட்டமிட்ட வகையில் எமது சமூகத்திற்கு எதிராகத் தூண்டிவிடப்பட்டுள்ள அதீதமான போதைப்பாவனையை இல்லாதொழிக்க, அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளது இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம்.

இலங்கையில் தமிழர் அதிகம் வாழும் பிரதேசங்களில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இது எமது இளம் சமுதாயத்தையும், தமிழ் சந்ததியையும் முற்றாக அழிப்பதாக அமைந்துள்ளது.

அதனைத் தடுப்பதற்கு எவ்வித வேறுபாடுமின்றி அனைவரும் ஒன்று சேரவேண்டும் எனக் குறித்த ஆசிரியர் சங்கம் அறைகூவல் விடுத்துள்ளது.

வடக்கு மாகாணத்திலிருந்தே மதுப்பாவனை மூலமான அதிக வருமானம் அரசுக்கு கிடைப்பதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தெற்கு - காலியிலுள்ள ரிச்மண்ட் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கூறியுள்ளார்.

இவை அனைத்தும், எமது இனம் தற்போது எவ்வழி சென்றுகொண்டிருக்கின்றது என்பதனை துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றன.


இவற்றை நாம் உள்வாங்கி, உரிய பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்காது விட்டால் எமது தமிழ் இனத்தை எவராலும் காப்பாற்றமுடியாது.

சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொரு நிறுவனமும் இதனை ஒரு தொடக்கப் புள்ளியாகக் கொண்டு, போதைப் பாவனையற்ற தமிழ் மண்ணை உருவாக்க திடசங்கற்பம் பூணவேண்டும். கிடைக்கும் அனைத்து மேடைகளிலும், மதுப்பாவனைக்கெதிரான கோஷங்கள் அடுத்துவரும் சிலபலவாரங்களுக்குத் தொடரவேண்டும். உளமார இதற்கு உழைக்க வேண்டியது அனைத்து சமய, சமூக, அரசியற் தலைவர்களினதும் தலையாய கடமை என்பதனை மனதிற்கொள்க.

போதையை ஒழிக்க பொருத்தமான தருணம் இது. உரியவர்கள் இதனைச் சரியாகப் பயன்படுத்துவார்களா?

- அக்கினிக்குமரன்

# கலைந்து போகாத கனவுகள்



அண்மையில் அமெரிக்காவில் வெளிநாடுகளுக்கான புலனாய்வுப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் போர் முடிவடைந்த பின்பு விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் முற்றாக இல்லாமல் போய் விட்ட போதிலும் கூட புலிகளின் சர்வதேச வலையமைப்பு வலுவாக இயங்கி வருவதாகவும், நிதி சேகரிப்பு போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளது. இந்தப் பிரிவினால் இப்படியான அறிக்கைகள் 2012ஆம் ஆண்டு தொடக்கம் அதன் வருடாந்த அறிக்கையில், இப்படியான தகவல்களை வெளியிட்டு வருவதை ஒரு மரபாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

ஆனால் விடுதலைப்புலிகளின் ஆதரவு அமைப்புகள் எனக் கருதப்படும் "கடல் கடந்த தமிழீழ அரசு ", "ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு" ஆகியன சுதந்திரமாக அமெரிக்காவில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இலங்கையில் அதிகாரத்தின் உச்சத்தில் ஏறி அமர்ந்து ஆடாத ஆட்ட மெல்லாம் ஆடியவர்கள். இன்று அதிகாரத்திலிருந்து தூக்கி எறியப்பட்ட பின்பும் மீண்டும் ஆட்சியில் ஏறிவிடும் கனவுகளில் மிதந்து கொண்டிருக்கும் சிலரின் வெறும் வாய்களுக்கு அவல் கிடைத்து விட்டது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா கொதித் தெழுந்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவர்களுக்கு அடிக்கடி புலிக் காய்ச்சல் பிடிப்பது அப்படி ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல. புலிக்ள் மீழெழுச்சி பெறுவதைத் தடைசெய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் கேள்வி கேட்டுள்ளார். அதற்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்க அறிக்கையிலேயே இலங்கையில் புலிகளின் நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகக் குறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டி பதிலடி கொடுத்துள்ளார். ஆனால் அவர் திருப்தியடையவில்லை அவர்கள் கிடைத்த அவலைத் துப்பி விடவோ, விழுங்கி விடவோ தயாரில்லை. அவர் புலி எதிர்ப்பிலேயே தங்கள் ஊழல் அரசியலை மறைத்து அதிகாரப் பேயாட்டம் போட்டவர்கள். மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற புலிகளிலும், புலம்பெயர் தமிழர்களிலும் பிடித்துத் தொங்க ஆரம்பித்து விட்டனர். அருண்டவன் கண்களுக்கு இருண்ட தெல்லாம் பேய் என்பார்கள். இவர்கள் இருண்ட தெல்லாவற்றையுமே சிங்கள மக்களுக்குப் பேய் எனக் காட்டி வயிறு வளர்க்கும் கூட்டம்.



ஆனால் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தப் பிரச்சினையை பலபடி முன்னே போய் பயங்கரமான முறையில் அணுகியுள்ளார்.

**விடுதலைப்புலிகளின் ஆதரவு அமைப்புகள் எனக் கருதப்படும் "கடல் கடந்த தமிழீழ அரசு" "ஒபாமாவுக் கான தமிழர் அமைப்பு" ஆகியன சுதந்திரமாக அமெரிக்காவில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.**

**எனினும் இலங்கையில் அதிகாரத்தின் உச்சத்தில் ஏறி அமர்ந்து ஆடாத ஆட்ட மெல்லாம் ஆடியவர்கள். இன்று அதிகாரத் திலிருந்து தூக்கி எறியப்பட்ட பின்பும் மீண்டும் ஆட்சியில் ஏறிவிடும் கனவுகளில் மிதந்து கொண்டிருக்கும் சிலரின் வெறும் வாய் களுக்கு அவல் கிடைத்து விட்டது.**

அவர் புலிகள் இன்னும் சர்வதேச அளவில் வலுவாக இருப்பதாகக் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி தங்கள் காலத்தில் தாங்கள் இலங்கையில் புலிகள் மீள் எழுச்சி பெறுவதைத் தடுத்து வந்ததாகவும், இப்போதைய அரசாங்கம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி விட்டதால் புலிகள் மீண்டும் அணி திரளும் சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டு விட்டதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு எந்த ஒரு படைமுகாமும் அகற்றப் படவில்லை என்றாலும் கூட அவர் இப்படியான ஒரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இனி எந்த ஒரு இராணுவ முகாமும் அகற்றப்படக்கூடாது என்பதுக்காக அவர் அரசாங்கத்துக்கு விடுத்த எச்சரிக்கையாகவும் அது இருக்கலாம்.



முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ முப்படையினரையும், பொலிஸ் திணைக்களத்தையும் தனது அதிகாரத்துக்குள் வைத்துக் கொண்டு ஒரு சர்வதிகார ஆட்சியை நடத்தியவர். வடக்குக் கிழக்கில் சிவில் நிர்வாகம் என்பது இராணுவத்தால் கட்டுப்படுத்தப் பட்டது. மக்களின் சகல நடவடிக்கைகளிலும் இராணுவத் தலையீடு ஊடுருவியிருந்தது. எங்கும் படை முகாம்கள் விரிந்து கிடந்தன. தென்னிலங்கையில் கூட கட்டுநாயக்கா தொழிலாளர் போராட்டம், வெலிவேரியா குடிநீர்ப் பிரச்சினை, பல்கலைக்கழக மாணவர் போராட்டம் போன்ற சம்பவங்களில் படையினரும், பொலிஸாரும் இறக்கப்பட்டு துப்பாக்கிச் சூடு உட்பட மக்கள் மீதான வன்முறைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும் பாதுகாப்புத் தேவைகளுக்கும் அப்பால் இராணுவம் பல்வேறு துறைகளில் ஆதிக்கம் செலுத்தும் நிலையும் ஏற்படுத்தப்பட்டது. உல்லாச சுற்றுலா விடுதிகளை நடத்துதல், விவசாயப் பண்ணைகளை நடத்துதல், வர்த்தகம், கட்டட நிர்மாணம் எனப் பல துறைகளுக்கும் இராணுவச் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டன.

அதிவேக நெடுஞ்சாலைகள் அகன்ற காப்பெற் வீதிகள் என்பன மக்களின் தேவைகளுக்கும், பொருளாதார அபிவிருத்திக்குமாகவே அமைக்கப்படுவதாகக் கூறப்பட்டது. ஆனால் அதன் பின்னால் ஒரு அடிப்படையான உள்நோக்கம் புதைந்து கிடந்தது. அதாவது எந்த நேரத்திலும் எந்த இடத்துக்கும் போய்ச் சேரக்கூடிய வகையில் நாடு முழுவதும் ஒரு வீதி வலைப்பின்னலும் முன் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படை நோக்கம் எந்த நேரத்திலும் தேவையான இடத்துக்குப் படைகளை இலகுவாகவும், துரிதமாகவும் நகர்த்தும் கட்டமைப்பை உருவாக்குவதாகும். அதற்கேற்ற வகையில் கேந்திர மையங்கள் பிரதான போக்குவரத்து மார்க்கங்கள் என்பனவற்றில் பெரும் இராணுவ முகாம்களும் கட்டளைப் பீடங்களும் அமைக்கப்பட்டன.



ஒரு புறம் மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக சர்வதிகார அரசியல் நடத்த அதைப் பாதுகாக்கும் வகையில் நாடு படிப்படியாக இராணுவ மயப்படுத்தப்பட்டு வந்தது. என்றுமே முடிசூடா மன்னர்களாக இருந்து தங்கள் ஊழல் மோசடிகளைத் தொடர முடியும் எனக் கனவு கண்டனர்.

ஆனால் இவர்களின் பேராசைக் கனவுகள் கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துடன் சீர்குலைந்து விட்டன. இப்போது இவர்களின் கைகளை நோக்கி விலங்குகள் கலகலக்க இவர்களின் வரவுக்காக சிறைச் சாலைக்கதவுகள் திறந்து கிடக்கின்றன.

எனினும் இவர்களின் கனவுகள் இன்னும் கலையவில்லை. மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற புலிப் பூச்சாண்டி, புலம்பெயர் தமிழர்கள் எனக் காட்டி தமிழ் மக்களுக்கு எதிராகவும் பொது பலசேனா, சிங்கள ராவய போன்றவற்றால் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும், சிங்கள மக்களை இன வெறியூட்டி ஆட்சிக்கு வரக் கனவு காண்கின்றனர்.

அவை கலைக்கப்பட வேண்டிய கனவுகள் என்பதை அவர்கள் வெகு விரைவில் புரிந்து கொள்வார்கள். ***

**மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக சர்வதிகார அரசியல் நடத்த, அதைப் பாதுகாக்கும் வகையில் நாடு படிப்படியாக இராணுவ மயப்படுத்தப்பட்டு வந்தது. என்றுமே முடிசூடா மன்னர்களாக இருந்து தங்கள் ஊழல் மோசடிகளைத் தொடர முடியும் எனக் கனவு கண்டனர்.**

# நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமா?

- பவள சங்கரி திருநாவுக்கரசு



**இன்பமும், துன்பமும் பிறர் தர வாரா !!**

நம்முடைய வெற்றிக்கும், தோல்விக்கும் நாமே தான் முழுக் காரணமாகிறோம். வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டுமா? அதற்கு என்ன செய்ய வேண்டும், மற்றும் செய்யக் கூடாது? வாருங்கள் பார்க்கலாம்!

ஒவ்வொரு ஆண்டும், புது வருடத்தில், நாம் ஒரு சில தீர்மானங்கள் எடுத்துக் கொள்கிறோம். அப்படி எடுத்துக் கொள்ளும் தீர்மானங்களைச் செம்மையாக நிறைவேற்றும் பட்சத்தில், நம்முடைய வாழ்க்கைத் தரம் உயரும் வாய்ப்பு அதிகரிக்கிறது. எந்தக் காரியத்தையும் தள்ளிப் போடாமல் செய்ய வேண்டிய வேளையில் தவறாமல் செய்ய வேண்டும் என்கிற ஒரு தீர்மானம் எடுக்கும் பட்சத்தில், நாம் வெற்றியை நோக்கி எடுத்து வைக்கும் முதல் படியாக அது மாறி விடுகிறது என்பதில் ஐயமில்லை.! அதனால் நாம் எக்காரணம் கொண்டும் நம்முடைய கடமைகளைத் தள்ளிப் போடுவதில்லை என்ற வாய்ப்புக்களையும், வருமானங்களையும் கூட இழந்திருப்பதாகவும் ஒப்புக் கொண்டுள்ளனர். இதனால் எத்தனையோ, இழப்புக்களை சந்திக்கவும் நேரிடலாம்

இந்த பழக்கம் விலை மதிப்பில்லாத நேரத்தை மட்டும் வீணடிக்காமல், மன அழுத்தத்தையும் அதிகரிக்க வல்லதாயினும், நம்முடைய குறிக்கோளை அடைவதிலும், கனவு நிறைவேறுவதிலும் தடைகளை ஏற்படுத்தி விடுகிறது. இது பிறவிப் பழக்கமோ, பரம்பரைப் பழக்கமோ அல்ல. இடையில் கற்றுக் கொள்ளும் ஒரு தீய பழக்கமே என்கின்றனர், வல்லுனர்கள். இந்தப் பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கு, முதலில் நாம் எந்த வகையில் நேரத்தை வீணடிக்கிறோம் என்பதை இனம் காண வேண்டும். இதற்காகப் பல மனோதத்துவ நிபுணர்கள் பல வழிமுறைகளைக் கண்டறிந்துள்ளனர். அதைப் பற்றி பார்ப்போம்

**முதற்படி:** எப்பொழுது, எப்படி, ஏன் தீர்மானம் எடுத்துக் கொள்ளத் தயங்கக் கூடாது

தாம் தள்ளிப் போடுபவர் இல்லையே என்ற எண்ணம் ஒவ்வொருவருக்குள்ளும் இருந்தாலும், பெரும்பாலும் ஏதோ ஒரு சூழ்நிலையில், ஏதோ ஒரு காரணத்திற்காக நாம் தள்ளிப் போட்டுக் கொண்டு தான் இருக்கிறோம்

உதாரணமாக, பலர் சிரமமான காரியங்கள் என்பதற்காகவோ, நீண்ட வரிசையில் நின்று பில் கட்டுவது, பல நாட்களாக சேர்த்து வைத்திருக்கும் பரண் குப்பையைச் சுத்தம் செய்வது போன்ற வேலைகளை முடிந்த வரை தள்ளிப் போட்டுத்தான் செய்கிறார்கள். ஆனால், சமீபத்தில் எடுத்த ஒரு ஆய்வறிக்கையின்படி 25% தினர், இது போன்ற பழக்கம், தங்கள் வாழ்க்கையில் ஒரு தீராத பிரச்சினையாக உள்ளதென்றும், 40% தினர், பல நேரங்களில் இந்தத் தள்ளிப் போடும் வழக்கத்தினால், பல தள்ளிப் போடுகிறோம்? நம் வாழ்க்கையில் ஏதோ ஒரு பகுதியில்தான் நாம் இதைச் செய்கிறோம். உதாரணமாக, பலர் தன் அன்றாடக் கடமைகள் எல்லாவற்றிலும் மிகத் தெளிவாக இருப்பவர்கள், வழக்கமான மருத்துவப் பரிசோதனை, உணவுக் கட்டுப்பாடு போன்றவற்றில் கோட்டை விட்டு விடுவார்கள்.

இதனைக் கண்டு பிடிப்பதற்கு, கடந்த 6 மாத காலத்தில் நாம் எதற்கெல்லாம் தள்ளிப் போட்டிருக்கிறோம் என்பதைப் புரட்டிப் பார்க்க வேண்டும். நம்முடைய தொழில் சம்பந்தப்பட்டதாகவோ, சமூக வாழ்க்கை, பொருளாதாரச் செயல்கள், இப்படி எதுவாகவும் இருக்கலாம். இது எதனால் தள்ளிப் போடப் பட்டது? பயம், சலிப்பு, களைப்பு, நன்றாக செய்ய வேண்டும் என்ற பேராவலாகவும் இருக்கலாம். இல்லை வேறு ஏதாவது பொழுது போக்கில் ஈடுபட்டு, இதையெல்லாம் தள்ளிப் போட்டோமா? இதைக் கண்டறிந்தாலே அதிலிருந்து, எளிதாக மீண்டு விடலாம்

**இரண்டாம் படி;** நாம் எப்பொழுதுமே மிக நன்றாக ஒரு காரியத்தை செய்ய வேண்டும் என எதிர் பார்ப்போமானால், எல்லாவற்றையும் குழப்பிக் கொள்ளாமல் நிதானமாக நன்றாகச் செய்யலாம் என்று தள்ளிப் போடுவோம். தகுதிக்கு மீறிய உயர்ந்த தரத்தை எதிர் பார்ப்பதைத் தவிர்த்தாலே, இது போன்று தள்ளிப் போடுதலைத் தவிர்க்கலாம் என்று நியூயோர்க்கைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் ஜூலி, தன்னுடைய TIME MANAGEMENT FROM THE INSIDE OUT, என்கிற பத்திரிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதற்காக ஒழுங்கு முறையைக் கைவிட்டு விட வேண்டும் என்பது பொருளல்ல. தேர்ந்தெடுத்த ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்தாலே போதும். எந்த வேலைக்கு அதிகமான கவனம் தேவைப் படுகிறது என்பதைக் கண்டறிய வேண்டும். இப்படிச் செய்வதால் முக்கியமாகத் தேவையான இடத்தில் நம் நேரத்தைச் செலவிட முடியும்

**மூன்றாம் நிலை;** ஒரு வேலையை நாம் தள்ளிப் போடுவதற்கான காரணம் பல நேரங்களில் நம் அணுகு முறையால் தான். உதாரணமாக, தாம் எழுத வேண்டிய கணக்குகள், அல்லது, வரவு செலவுக் கணக்குப் போடுவது போன்ற வேலையை இரவு 10 மணிக்கு மேல் செய்வது. நம்முடைய தெளிவான சிந்தனைக்கு முட்டுக் கட்டை போடக்கூடிய அந்த வேலையைத் தேர்ந்தெடுப்பது, தம் வேலையைத் தள்ளிப் போடத் தூண்டுகிறது.

இது போன்று தொடர்ந்து தள்ளிப் போடுகிறோம் என்றால், அந்த வேலையச் செய்யும் முறையைச் சற்றே மாற்றியமைக்க வேண்டும். சலிப்படையச் செய்யக் கூடிய வேலைகளைச் செய்ய முற்படும் போது விடுமுறை நாளையோ, ஓய்வாக இருக்கும் நேரத்தையோ தேர்ந்தெடுத்து, மனம் விரும்புகிற நல்ல பாடலோ, பிடித்த உணவு வகைகளோ, பக்கத்தில் வைத்துக் கொண்டு செய்ய முற்பட்டால் எப்படித் தள்ளிப் போடும் எண்ணம் வரும்? எந்த வேலையாக இருந்தாலும், அதை விருப்பத்துடன் உற்சாகமாக, நகைச்சுவை உணர்வுடன், ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு செய்ய வேண்டும். அப்படியும் செய்ய முடியவில்லையென்றால் வேறு யாராவது மூலமாக வேலையை முடிக்கப் பார்க்க வேண்டும். தம்முடைய பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கப் பார்ப்பதால், அதை நிறைவேற்றுவதற்குரிய சக்தியையும், நேரத்தையும் விட

**(16 ஆம் பக்கம் பார்க்க)**

# சீனாவில் சுதந்திரமான பெண்களின் ராஜ்ஜியம்!

புராதன காலத்தில் பெண்களால் தலைமை தாங்கப் பட்ட தாய் வழிச் சமுதாயம் இருந்ததாக கேள்விப் பட்டிருப்போம்.

ஆனால், அந்தச் சமுதாயம் எப்படி இருக்கும் என்பதைச் சீனாவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் நேரில் காணலாம். தென் மேற்கு சீனாவில் உள்ள யுன்னான் மாகாணம் பெருமளவு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகும்.

சுவிட்சர்லாந்து போன்ற அழகான இடங்களைக் கொண்ட லிஜியான் நகரத்திற்கு முதலில் செல்ல வேண்டும். அங்கிருந்து சில நூறு கிலோ மீட்டர் தூரத்தில் மொசுவோ மக்கள் வாழும் பிரதேசம் உள்ளது. சீனாவின் அங்கீகரிக்கப் பட்ட தேசிய இனங்களில் அதுவும் ஒன்று.

சுமார் நாற்பதாயிரம் மக்கள் தொகை கொண்ட மொசுவா இனத்தவர்கள், திபெத்தோ-பர்மிய இனக் குடும்பத்தை சேர்ந்தவர்கள்.

திபெத்திய, பர்மிய மொழிகளுக்கு இடைப்பட்ட தனித்துவமான மொழியைப் பேசுகின்றனர். இன்றைய நவீன காலத்திலும் பாலின சமத்துவம் நிலவுவது அந்த இனத்தின் சிறப்பம்சம் ஆகும்.

அந்தச் சமுதாயத்தில் பெண்கள் தான் தலைமை வகிக்கின்றனர். வயலில் இறங்கி கடின வேலைகளை செய்வதும் பெண்கள் தான்! ஆண்கள் எந்த வேலையும் செய்யாமல் ஊர் சுற்றிப் பொழுதுபோக்குவார்கள்.

மொசுவோ மக்கள் இன்றைக்கும் கூட்டுக் குடும்பமாக ஒரே வீட்டிற்குள் வாழ்கின்றனர். வயது வந்த பெண்களுக்கு மட்டும் தனியான அறை ஒதுக்கப் பட்டிருக்கும்.

ஒரு பருவமடைந்த பெண், தனக்கான ஆண் துணையைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்கிறார். அவர் விரும்பும் ஆண், அன்றைய இரவு அவருடன் தங்கலாம்.

விடிந்தவுடன் அந்த உறவு முடிந்து விடுகின்றது. மொசுவா மக்கள் இதனை 'நடக்கும் திருமணங்கள்' என்று அழைக்கின்றனர்.

அந்த மக்களின் வாழ்க்கை முறையை வெளியில் உள்ளோர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். மொசுவா பெண்களின் பாலியல் சுதந்திரம் என்பது, தினசரி ஓர் ஆடவனுடன் படுக்கையை பகிர்ந்து கொள்வதல்ல.

ஓர் உறவானது, ஒரு நாள் மட்டுமல்லாது வருடக் கணக்காகவும் நீடிக்கலாம். அது அந்தப் பெண்ணின் தனிப்பட்ட சுதந்திரம். எந்தக் கட்டுப்பாடும் இன்றி, தனது வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கவும், மாற்றிக் கொள்ளவும் அந்தப் பெண்ணுக்கு உரிமை உண்டு.

ஒரு குழந்தை பிறந்தவுடன், அந்தப் பெண்ணுடன் உறவு கொண்ட எந்த ஆணும், தானே தந்தை என்று சொந்தம் கொண்டாடுவதில்லை. அந்தக் குழந்தையை பெற்று வளர்ப்பது, முழுக்க முழுக்க பெண் வீட்டார் பொறுப்பு.

இவர் தான் தந்தை என்று யாராவது இனம் காணப் பட்டாலும், குழந்தைக்கு பரிசுப் பொருட்களை கொடுப்பதுடன் அவரது கடமை முடிந்து விடுகிறது.

தொடர்ந்து, தாயான பெண்ணின் சகோதரர்கள் தான் தந்தை ஸ்தானத்தில் இருந்து அந்தக் குழந்தையை வளர்ப்பார்கள். மொசுவா மொழியில் அப்பா என்ற ஒரு சொல் கூடக் கிடையாது!

வேலைக்குப் போவதும், குழந்தை பெற்று வளர்ப்பதும் பெண்களாக இருந்தாலும், அது ஒரு பெண்ணாதிக்க சமுதாயமாக இருக்கவில்லை. மாறாக எல்லாக் கட்டத்திலும் பால் சமத்துவம் பேணப் படுகின்றது.

சிலநேரம், ஒரு குடும்பத்தில் பெண்களின் எண்ணிக்கை கூடி விட்டால், ஆண்கள் அதிகமாக உள்ள இன்னொரு குடும்பத்துடன் குடும்ப உறுப்பினர்களைப் பரிமாறிக் கொள்வார்கள்.

மொசுவா சமுதாயத்தில் கலாச்சாரப் புரட்சி முடிந்த பின்னர், மரபு வழித் திருமணங்கள் மீண்டும் அதிகரித்தன.

தொண்ணூறுகளுக்குப் பிறகு ஒட்டு மொத்த சீனாவின் பொருளாதாரம் மாற்றமடைந்தது. சீன ஆட்சியாளர்கள் முதலாளித்துவத்தை ஊக்குவித்தார்கள். அது மொசுவா மக்களின் வாழ்க்கையிலும் தாக்கத்தை உண்டாக்கியது.

பொதுவாக, அழகான மலைப் பிரதேசங்களை கொண்ட யுன்னான் மாகாணத்திற்கு, சீன உல்லாசப் பிரயாணிகள் படையெடுத்தார்கள். சுற்றுலாத் துறை நிறுவனங்கள், மொசுவா பிரதேசத்தையும் விட்டு வைக்கவில்லை.

மகளிர் தேசம் என்ற விளம்பரத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகள் கவர்ந்திழுக்கப் பட்டனர். பாரம்பரியமாக தந்தை வழி சமுதாயத்தில் வந்த சீனர்களுக்கு, பெண்களின் தேசம் பற்றிய தகவல்கள் புதுமையாகத் தோன்றின.


பலர் அங்கே சுதந்திரமான பாலியல் தொழில் நடப்பதாக தவறாகப் புரிந்து கொண்டனர். சுற்றுலா நிறுவனங்களும், நடக்கும் திருமணத்தில் ஒரு நாள் மணமகனாவது எப்படி? என்று விளம்பரம் செய்து சீன ஆண்களை கவர்ந்தார்கள்.

அனேகமாக, மொசுவோ பற்றிய கற்பனையான கிளுகிளுப்பூட்டும் கதைகளை மட்டுமே கேள்விப் பட்டு வரும் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்து திரும்பிச் செல்வார்கள் என்பதில் ஐயமில்லை. சுற்றுலா நிறுவனங்கள் அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்துள்ளன.


மொசுவா பிரதேசத்தில் ஒரு சிவப்பு விளக்குப் பகுதியை உருவாக்கி அங்கு சில மொசுவா பெண்களைப் பாலியல் தொழிலாளர்களாக

(20 ஆம் பக்கம் பார்க்க)



# சிம்மசொப்பனம் - 28



'பத்திரிகை தொடங்கலாம் என்று திட்டமிட்ட போது தோழர்கள் உதவிக்கு வந்தனர். லா பாட்ரியா தொடங்கப்பட்டது. ஸ்பெயினை எதிர்த்துப் போராடுவது என்பது அநீதியை எதிர்த்துப் போராடுவதற்கு சமமானது என்றார் மார்த்தி. ஸ்பெயின் மட்டுமல்ல அமெரிக்காவையும் தீவிரமாக எதிர்க்க வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டிருந்தார். அதாவது "ஏகாதிபத்தியம் எனும் பூதம் வந்த வடிவத்தில் வந்தாலும் அதை இனம் கண்டு எதிர்க்க வேண்டும்"

"க்யூபாவையும் லத்தீன் அமெரிக்க நாடுகளையும் தனது மாநிலங்களோடும் மேலும் ஒன்று சேர்த்து, அமெரிக்கா தனது கொடியில் மேலும் ஒரு நட்சத்திரத்தை வரைந்து கொள்ளவே விரும்பும்" என்று எழுதினார். "க்யூபாவை ஒரு சுரண்டப்படும் மாநிலமாக ஆக்காமல் தடுத்திட, சுதேசி ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதே முதல் கடமை" என்றார். "க்யூபாவின் இயற்கைச் செல்வம் அனைத்தும் க்யூப மக்களுக்கே சொந்தமாக இருக்க வேண்டும். அவர்களது வாழ்க்கை மேம்பாட்டுக்காகவே பயன்பட வேண்டும்" என்றார். அமெரிக்காவை சமரசமற்ற முறையில் எதிர்ப்பவனாக, தேச பக்திக்காக உயிரையும் தியாகம் செய்யும் மனத்திண்மை கொண்ட ஒருவனால் மட்டுமே, உண்மையான தேசபக்தனாக இருக்க முடியும் என்றார்"

ஜனவரி 1895 இல் மார்த்தி தலைமையில் ஃப்ளாரிடாவை நோக்கி மூன்று கப்பல்கள் படையெடுத்த போது, அமெரிக்கா அந்தக் கப்பல்களை கைப்பற்றியது. ஸ்பானிய அரசாங் கத்துக்கும் தகவல் அனுப்பியது. மார்ச் 25 இல் மார்த்தி க்யூப விடுதலைக் கான தனது கோட்பாட்டை முன் வைத்தார். அதன் முக்கிய சராம்சம்

01). கறுப்பர்கள் வெள்ளையர்கள் இருவரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

02). கறுப்பர்கள் போராட்டத்தில் ஈடுபடுவது அவசியம். அவர்களும் ஒடுக்கப்பட்டவர்களே.

03). ஸ்பெயினின் ஆதிக்கத்தை எதிர்க்காத ஸ்பானியர்களை, நாம் எதிர்க்க வேண்டிய அவசியமில்லை.

04). போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது தனியார் சொத்துக்களை சேதப்படுத்தக் கூடாது.

05). புரட்சியின் முடிவில் க்யூபாவின் பொருளாதரம் தழைக்க வேண்டும். அது தான் நம்முடைய 'நோக்கமாக இருக்க வேண்டும்.

1895இல் க்யூபாவின் சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்த போது க்யூபாவில் சுமார் 80,000 ஸ்பானிய வீரர்கள் பரவியிருந்தனர். மார்த்தியின் புரட்சிக்குழு எதிர்த்து நிற்க வேண்டியது இந்தப் பெரும் படையைத் தான்.

(தொடரும்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 679

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| 9 | | | | | | | |
| | | | | 10 | | | 11 |
| | 12 | | 13 | | | 14 | |
| 15 | | | | | 16 | | |
| | | 17 | | 18 | | | |
| 19 | | | | | | 20 | |

**மேலிருந்து கீழ்**

1 - மோசமான (பாலியல்) ரசனை.
2 - அழித்தல்.
3 - ஒரு வகைப் பிசினிலிருந்து தயாரிக்கப்படும் சிறு சிறு கட்டிகள்.
4 - அழுகை.
5 - வதனம்.
6 - தூர்.
8 - (தங்கம் போன்றவற்றில்) பொருள்களைச் செய்யும் போது ஏற்படும் சேதம்.
11 - வருமானம்.
12 - திரை.
13 - ஒரு மரக்கறி வகை.
14 - பெயரடையாக வரும் சொல்.
15 - இப்படி நட.
16 - கேள்வியின் ஆரம்பம்.
17 - பழையது.
18 - விதம்.

**இடமிருந்து வலம்**

1 - பயிரிடும் தொழில் செய்பவர்.
4 - அன்னம்/சோறு/அமிர்தம்.
7 - தேர்.
8 - பணியாள்.
9 - வழக்காறு.
10 - இதில் பலருக்கு மோகம்.
12 - வர்த்தகம்/ வியாபாரம்.
14 - முகத்தில் எண்ணெய்ச் சுரப்பிகள் அடைபடுவதால் ஏற்படுவது.
15 - நாய்க் குடும்பத்தைச் சேர்ந்த விலங்கு.
16 - ஒரு பொருளை உச்ச விலைக்கு விற்க மேற்கொள்ளும் முயற்சி.
17 - சூரியன்.
19 - எழுத்து ஊடகம்.
20 - ஆட்டின் தாடையில் தொங்கும் முடி.

அனுப்புபவர் பெயர்:------------------------------

விலாசம்:------------------------------------------

-----------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சொ. போட்டி இல 679

■ சொற்சிலம்பம் போட்டி 679ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 15 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, ஜீலை 22 மற்றும் ஜீலை 29ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 676இல் பரிசு பெற்றோர்

1
செல்வன் ரா.சேந்தன்,
கைவேலி,
புதுக்குடியிருப்பு.

2
செல்வி. ஸ்ரீ. ஜஷாரா,
ஆண்டு 10 A,
யா/ வேம்படி மகளிர் உயர்தர
பாடசாலை,
யாழ்ப்பாணம்.

3
ஜ.விஜயபாலன்,
இல -07 நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

**திருமதி ம. வளர்மதி,**
3 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

**தா.சிறீதரன்,**
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

**கே. இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

**பொன்.கயிலாயபிள்ளை,**
இல 77, 2ஆம் பகுதி,
விசுவமடு மேற்கு,
விசுவமடுக்குளம்.

**இ.சண்முகதாஸ்,**
கொத்தியால் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

### சொற்சிலம்பம் போட்டி 677இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. வனவாசம்.
2. யாகம்.
3. படை.
4. திக்குதல்.
5. சட்டை.
6. தாடி.
8. குட்டு.
10. தரை.
13. உடல்.
14. பெரியன்னை.
15. குடம்பி.
17. கடம்.
18. ஆண்.
19. மது.
20. நகை.
21. பதி.

**இடமிருந்து வலம்**

1. வளையாபதி.
5. சதா.
7. கடைக்குட்டி.
9. வாதம்.
11. குட்டை.
12. சரை.
13. உதடு.
15. குடல்.
16. மாரி.
17. கடல்.
19. மடம்.
20. நண்பன்.
22. தும்பிக்கை.
23. திரை.

# சவூதி இளவரசருக்காக பறக்கும் அரண்மனை!

சில ஆண்டுகளுக்கு முன் உலகின் மிகப்பெரிய தனிநபர் பயன்பாட்டு விமானம் உருவாக்கப்பட்டு வருவது குறித்த தகவல்கள் செய்தித் தளங்களில் பரபரப்பாக எழுதப்பட்டன. உலகின் மிகப்பெரிய விமானம் என்ற பெருமைக்குரிய 'ஏர்பஸ் ஏ380' விமானத்தைப் பெரும் பணக்காரர் ஒருவருக்காக, ஆடம்பர வசதிகளுடன் மாற்றி அமைக்கப்படுவதாக அந்தத் தகவல்கள் கூறின.

இந்த விமானம் சவூதி அரேபிய நாட்டின் இளவரசரும், உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவருமான அல் வாலீத் பின் தலாலுக்கு முன்பதிவு செய்யப்பட்டது.

**மதிப்பு**

'ஏர்பஸ் ஏ380' விமானம் 300 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடையது. அந்த விமானத்தில் ஆடம்பர வசதிகளுக்காக கூடுதலாக 200 மில்லியன் டொலர் செலவிட முடிவு செய்யப்பட்டது.





இடவசதி இந்த விமானத்தில் வெறும் 'எக்கனமி கிளாஸ்' இருக்கைகளுடன் அமைத்தால் 853 பேர் பயணிக்க முடியும். ஆனால், இந்த விமானத்தை சவூதி இளவரசர் தனது குடும்பத்தினர், சகாக்கள் மற்றும் வர்த்தக நண்பர்களுடன் பயணிக்கும் வகையில், சகல வசதிகளுடன் மாற்றப்பட்டது.

**ரோல்ஸ்ராய்ஸ்க்கு இடம்**

விமானத்தில் சவூதி இளவரசரின் ரோல்ஸ்ராய்ஸ் கார் நிறுத்துவதற்காக பிரத்யேக இட வசதியுடன் செய்யப்பட்டது. இதன்மூலம், காரில் நேரடியாக விமானத்திற்குள்ளேயே வந்து இறங்க முடியும்.

**வடிவமைத்த (டிசைன்) நிறுவனம்**

'ஏர்பஸ் ஏ380' விமானத்திற்குள் ஆடம்பர வசதிகளுடன் கட்டமைப்பதற்காக இங்கிலாந்தைச் சேர்ந்த 'டிசைன் க்யூ' என்ற பிரபல நிறுவனத்தை சவூதி இளவரசர் அல் வாலீத் நியமித்தார். அந்த நிறுவனம்தான் உட்பகுதியை வடிவமைக்கும் பொறுப்புகளை ஏற்றது.

**அறைகள்**

உரிமையாளர் மற்றும் அவரது குடும்பத்தினர் தங்குவதற்கான 2 பிரம்மாண்ட படுக்கையறைகள், அதனுடன் இணைந்த குளியலறைகள், 20 விருந்தினர்கள் தங்குவதற்கான படுக்கை வசதிகள், கூட்ட அரங்கம், பொழுதுபோக்கு அரங்கம், சாப்பாட்டுக் கூடம் என்று ஆடம்பரத்தின் உச்சமாக ஒரு ஐந்து நட்சத்திர விடுதிக்கு இணையாக இத்னை உருவாக்கினர்.

**தொழுகை அறை**

விமானத்தில் தொழுகைக்கான இடத்தில் இளவரசர் அமரும் தரைவிரிப்பு எந்தநேரமும் மெக்காவை நோக்கி இருக்கும் வகையில், கம்ப்யூட்டர் முறையில் கட்டுப்படுத்தும் வசதி கொண்டது.

**'மெஜிக் கார்பெட்'**

இந்த விமானத்தில் இருக்கும் 'மெஜிக் கார்பெட்'டில் இருந்து விமானம் பறந்துகொண்டிருக்கும்போது வெளிப்புறத்தில் இருக்கும் சூழலை அப்படியே திரையில் பார்க்க முடியும்

**3 ஆண்டுகள்**

இந்த விமானத்தில் ஆடம்பர வசதிகளுடன் கட்டமைப்பதற்கு 3 ஆண்டுகள் பிடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், என்ன நடந்தது தெரியுமா?

**உரிமையாளர் மாற்றம்**

உலகின் மிகப்பெரிய தனிநபர் பயன்பாட்டு விமானமாக கூறப்பட்ட இந்த 'ஏர்பஸ் ஏ380' விமானத்தை சவூதி இளவரசர், வேறு ஒருவருக்கு கைமாற்றிவிட்டார் சவூதி இளவரசர் அல் வாலீத் பின் தலால். காரணம் என்னவென்று தெரிவிக்கப்படவில்லை.



**மன்னரிடம் உள்ள விமானங்கள்**

பணக்காரர்கள் கார் சேகரிப்பதுபோல அல் வாலீத்திடம் பல விமானங்களைச் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி வருகிறார். அவரிடம் 'போயிங் 747', 'ஹாக்கர் ஜெட்', 'ஏர்பஸ் ஏ321' போன்ற தனிநபர் பயன்பாட்டு விமானங்கள் சொந்தமாக உள்ளன. உலகின் மிகவும் விலை உயர்ந்த ஆடம்பரப் படகும் உள்ளது.







# கெட்ட பையன்டா - படம்

ஜி.வி.பிரகாஷ் நடிப்பு, இசை இரண்டு குதிரைகளையும் ஒரே வண்டியில் பூட்டி மிக வேகமாக போய்க் கொண்டிருக்கிறார். அவர் நடிக்கும் படங்கள் அனைத்தும் பார்த்தவுடன் ஈர்க்கும் வகையில் இருப்பதையே விரும்புகிறார். தலைப்பில் தொடங்கி எல்லாவற் றையும் கவனித்து செய்கிறார். டார்லிங், த்ரிஷா இல்லைனா நயன்தாரா போலவே அடுத்த படத்தின் தலைப்பையும் ரசி கர்களை ஈர்க்கும் விதமாக வைத்துள்ளார். தலைப்பு ''கெட்ட பையன்டா '' இந்த கார்த்தி என்று ரஜினியின் பிரபலமான வசனத்தை உல்டா செய்துள்ளார்.



## கடைசி நேரத்தில் தடை

அரிமாநம்பி இயக்குநர் ஆனந்த்சங்கர் இயக்கத்தில் விக்ரம் நடிக்கவிருக்கும் புதியபடத்தி படப்பிடிப்பு தற்போது தொடங்கஇருந்தது. மலேசி யாவில் முதல்கட்டப் படப்பிடிப்பு என்று சொல்லப்பட்டது. அதற்காக படக்குழுவினர் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்த கடைசிநேரத்தில் படப்பிடிப்பு இரத்தாகியிருக்கிறது. படக்குழுவினர் எல்லோருக்கும் விமானப்பயணச்சீட்டெல்லாம் வாங்கிவிட்டார்களாம். பயணத்துக்குத் தயாராகிற நேரத்தில் பயணம் தடைபட்டிருக்கிறது. அதற்குக் காரணம் தயாரிப்பாளர்கள்சங்கத்தலைவர் கலைப்புலிதாணு கொடுத்த ஒரு புகார்தான் என்று சொல்லப்படுகிறது. இந்தப்படத்தைத் தாணுவின் சகோதரர்தான் முதலில் தயாரிப்பதாக இருந்தது. இடையில் திடீரென ஐங் கரன்நிறுவனத்துக்குப் படம் கைமாறியது. அதிலே சிக்கல் இருந்ததாம்.

## நம்பிக்கை தானே வாழ்க்கை

செல்வராகவனுடன் மீண்டும் இணைந்த பின்பு, இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா மீண்டும் தன் பழைய ஃபார்முக்கு திரும்பி வருவார் என ரசிகர்கள் எதிர்பார்த்திருக்க, தற்போது நடக்கும் விஷயங்கள் யுவனுக்கு மிகவும் அதிர்ச்சி அளித்துள்ளதாம். அவரோடு இணைந்து பணியாற்றிய இயக்குநர்கள் பலரும் வேறு இசையமைப்பாளரை ஒப்பந்தம் செய்து வருகிறார்களாம். அமீர், ஹரி, சசீந்திரன், வசந்த், பாண்டிராஜ், சீனு ராமசாமி என பட்டியல் நீ. ண்டுகொண்டே போவது ரசி கர்களை மிகுந்த மனவேதனைக்கு ஆளாக்கியுள்ளது. இருந்தாலும் செல்வராகவன் படம் வெளியான பின்பு எல்லோரும் திரும்ப யுவனை நாடுவார்கள் என நம்புகிறார்கள் ரசிகர்கள்.



## அதிகபட்ச க

இதுவரை தமிழை விட, தெலுங்கி
வினால் ரசிகர்களை ஏங்க வைத்த
தமன்னாவுக்கு எப்போதும் வரவே
நாயகியாக நடித்திருக்கும் தமன்ன
நடிக்கும் பெங்கால் டைகர் படத்தி
வேண்டுமானாலும் காட்டலாம். இ
இந்தப் படத்தில் உச்சபட்ச கவர்ச்ச
தானாகவே இயக்குநருக்கு சட்டம்

### பத்து என்றதுக்கு இறுதிக்கட்டம்

விக்ரம் ஒப்பந்தம் செய்து, விஜய்
இயக்கத்தில் பத்து என்றதுக்குள்
தயாரித்து வருகிறார் ஏ.ஆர்.முரு
பொங்கலுக்கு வெளியிடத் திட்ட
ஆனால் இடையில் விக்ரம் செய்த
னைகளால் படம் முடிவடையாமல்
கொண்டே வந்ததாம். இதனால் ஏ
ஆர்.முருகதாஸ் நான் விலகிக்கெ
நீங்களே தயாரித்து வெளியிடுங்க
ஃபாக்ஸ் ஸ்டார் ஸ்டுடியோவிடம்
விலகிவிட்டாராம். கார்ப்பரேட் மு
ஃபாக்ஸ் விக்ரமிடம் பேச, படம் வே
இறுதிக்கட்டப் பணிகளை நெருங்





# ஓர் இன்ப அதிர்ச்சி ரசிகர்களுக்கு

அட்டகத்தி படத்தின் மூலம் தினேஷை நாயகனாகவும், மெட்ராஸ் படத்தில் கலையரசனை இரண்டாவது நாயகனாகவும் நடிக்க வைத்து இருவருக்குமே திரையுலகில் ஒரு நல்ல இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் இயக்குநர் ரஞ்சித். தற்போது இருவருக்கும் ஓர் இன்ப அதிர்ச்சியைத் தந்துள்ளார்". ரஜினிகாந்தை வைத்து தான் இயக்கப்போகும் படத்திலும் இருவரையும் நடிக்க வைக்கப்போகிறார். இருவருக்குமே முக்கியத்துவம் உள்ள பாத்திரங்களாம்!

# ஒரு குழந்தையின் அம்மாவாக - நயன்தாரா

நயன்தாரா நடித்த திகில் படமான மாயா படத்தின் படக்காட்சிகளோ பயங்கர சண்டைக்காட்சிகளாக இருப்பதால் படத்துக்கு இப்போதே எதிர்பார்ப்பு தோன்றியுள்ளது. இந்தப் படத்தில் ஒரு குழந்தையின் அம்மாவாக நயன்தாரா நடித்துள்ளார். பிபாசா பாசு நடித்து திரையுலகில் வெற்றி வாகை சூடிய ஆத்மா எனும் பேய் படத்தின் அப்பட்டமான பிரதி என்று கிசுகிசுக்கப்பட்டு வருகிறது. அதுவும் ஆத்மாவில் பிபாசா பாசுவின் பெயர் மாயா என்பதுதான் பிரதான தலைப்பு!



# ஒரே பாணிப் படங்கள்

தமிழ் சினிமாவில் ஒரு படம் ஆரம்பித்து வெற்றிப்படமாக அமைந்து விட்டால் அதே மாதிரி டசின் படங்கள் வந்தே தீரும். ஆம், தற்போது அழகான

கதாநாயகிகள் அதிரடி போலிஸாக மாறிப் பட்டையைக் கிளப்பும் பெண் போலிஸ் காலம் ஆரம்பித்துள்ளதாம். ஜில்லாவில் காஜல் அகர்வால் ஆரம்பித்து வைத்ததை தூங் காவனம் படத்தில் த்ரிஷாவும், தனி ஒருவன் படத்தில் நயன்தாராவும், கான் படத்தில் டாப்ஸியும் தொடர்ந்து செய்கிறார்கள்.



# ...ட்ச கவர்ச்சி

..., தெலுங்கில்தான் தனது அதிகபட்ச கவர்ச்சி ...ங்க வைத்தவர் தமன்னா. அதனாலேயே அங்கு ...தும் வரவேற்பு உண்டு. பாகுபலி படத்தில் ...தும் தமன்னா அடுத்து ரவிதேஜாவுக்கு ஜோடியாக ...கர் படத்தில் என்னை எவ்வளவு கிளாமராக ...ட்டலாம். இதுவரைக்கும் காட்டாத அளவுக்கு ...ட்ச கவர்ச்சியைக் காட்ட இருக்கிறேன் என்று ...க்கு சட்டம் போட்டிருக்கிறாராம்.

# ...றதுக்குள்ளே - ...ட்டம்

...ப்து, விஜய் மில்டன் ...றதுக்குள்ள படத்தைத் ...ஆர்.முருகதாஸ். ...டத் திட்டமிட்டார். ...ரம் செய்த பிரச்சி ...டையாமல் இழுத்துக் ...இதனால் கடுப்பான ஏ. ...விலகிக்கொள்கிறேன். ...வெளியிடுங்கள் என ...யோவிடம் கூறி ...ப்பரேட் முதலாளிகளான ...ச, படம் வேகமாக ...ன நெருங்கிவிட்டதாம்.







# பாக்கியராஜ் குடும்பம் கடுப்பில்

ஏற்கனவே கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்தை பிரதி அடித்துவிட்டார் சந்தானம் என பாக்யராஜ் குடும்பம் அவர் மீது கடுப்பில் இருந்தனர். தற்போது இனிமே இப்படித்தான் படமும் பாக்யராஜ் படத்தைக் கலந்து எடுக்கப்பட்ட படம்தான் என அவரது குடும்பத்தினர் மேலும் கோபம் அடைந்து, பாக்யராஜ் மகன் நடிகர் சாந்தனு மறைமுகமாக சந்தானத்தை டுவிட்டரில் தாக்கி இருக்கிறார். எவ்வளவோதான் பிரதி அடிப்பீங்கள். எனக்கும் கொஞ்சம் மிச்சம் ... விட்டு வைப்பீங்களோ ... கேட்டு வாங்க வேண்டும் ... சாடியுள்ளார்!

## கற்றுக் தர முடியாதது!

சர். சி.வி. இராமன் தன்னுடைய ஆய்வகத்திற்கு ஒரு உதவியாளரை நியமிப்ப தற்கான நேர்காணலை நடத்தினார். அங்கு வந்தவர்களில் ஒருவன் மட்டும் அவருடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் திணறினான்.

சர்.சி.வி. இராமன் அவனிடம், தம்பி, இந்த வேலைக்கு ஏற்ற வகையில் உன் இயற்பியல் அறிவை வளர்த்துக் கொள். அடுத்த முறையாவது வெற்றி பெறுவாய் என்று அறிவுறுத்தினார்.

கவலையுடன் அங்கிருந்து கிளம்ப முயன்ற அவன், அங்கு கீழே ஒரு குண்டூசி கிடப்பதைப் பார்த்தான்.

அந்தக் குண்டூசியை எடுத்து, சர்.சி.வி. இராமனின் மேசை மேலிருந்த குண்டூசி டப்பாவில் அதைப் போட்டான்.

இதைக் கவனித்த சர்.சி.வி. இராமன் அவனை அழைத்தார். அவனிடம், நான் உன்னை வேலைக்குச் சோத்துக் கொள்கிறேன் என்றார்.


அந்த இளைஞன், ஐயா, சிறிது நேரத்துக்கு முன்னால், எனக்கு இயற்பியல் அறிவில்லை என்றீர்களே... என்றான்.

சர்.சி.வி. இராமன், இயற்பியலைக் கற்றுத் தரலாம். கற்றுக் கொள்ளலாம். ஆனால், பொறுப்புணர்ச்சியை யாரும் கற்றுத் தர முடியாது. அது இயல்பான ஒன்று. இப்போது உனக்கு வேலை கிடைத்ததற்கும் அந்தப் பொறுப்புணர்ச்சியே காரணம் என்றார்.

இளைஞன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

- தேனி.பொன்.கணேஷ்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க



## வாசிகசாலையின் பயன்கள்

- வாசிகசாலைக்குச் சென்று புத்தகங்களைப் படிக்கலாம்.
- வாசிகசாலைக்கு அன்றாடம் செல்லும் போது ஒவ்வொரு நாளும் வெளிவரும் பத்திரிகைகளை வாசிக்கலாம்.
- ஏழை மாணவர்களின் கல்வித்தரத்தினை உயர்த்தும் ஒரு உன்னதமான இடமாக வாசிகசாலை காணப்படுகின்றது.
- வாசிகசாலையில் பல மொழிகளில் உள்ள புத்தகங்களைப் படிக்கும் போது மொழித்திறன் ஏற்படுகின்றது.
- குறைந்த கட்டணத்தில் கூடிய நேர அளவினை செலவிட்டு அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- எனது பாடசாலையிலும் வாசிகசாலை உள்ளது .நான் அங்கு சென்று பல புத்தகங்களை வாசித்து வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளேன்.

## பட்டுப் பாவாடை

பட்டு குட்டிப் பாப்பாவுக்கு
குட்டி பட்டு பாவாடை.
திருவிழா் வந்ததற்கு
தாத்தா தந்த பாவாடை.

மாம்பழம் நிறமிருக்கும்
மஞ்சள் வண்ண பாவாடை.
தங்கம்போல ஜொலிஜொலித்து
தகதகக்கும் பாவாடை.

கையிரண்டும் பக்கம் நீட்டி
ஆலவட்டம் சுற்றினால்
ஆளோடு சுற்றிச் சுழலும்
அழகு வண்ண பாவாடை.

நாளை பள்ளி செல்லுவேன்
நண்பர்களுக்குக் காட்டுவேன்.
தாத்தா தந்த செய்தி சொல்லி
மகிழ்ந்து வீடு திரும்புவேன்.





இந்த இரு படங்களுக்கு இடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்.

## கோழைக்குத் துணிவு வருமா...?

காட்டில் கொம்புள்ள கலைமான் ஒன்று இருந்தது. ஒரு நாள் அது அழகான குட்டி ஒன்றை ஈன்றது. பிறந்த அந்தக் குட்டியைக் கண்ணும் கருத்துமாக கொடிய மிருகங்களிடம் இருந்து மிகவும் பாதுகாப்பாக வளர்த்து வந்தது.

பயமறியாது துள்ளித்திரிந்த அந்தக் குட்டிமானுக்குத் தினசரி சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்களின் குணநலன்கள், அவை தாக்கும் முறை, அதில் இருந்து எப்படி ஓடித் தப்புவது.? எனபது போன்ற பாதுகாப்பு வழிமுறைகளையெல்லாம் சொல்லிக் கொடுத்தது அதன் தாய் மான்.

ஒரு நாள் ஓநாயிடம் இருந்து தப்புவது பற்றிய பேச்சு வந்தது. அப்போது அந்தக் குட்டி மான் அம்மாவிடம், "அம்மா, உனக்கு ஓநாயின் உடலை விடப் பெரிய உடல், அதை விட வேகமாய் ஓடுகிறாய், தலையில் நீளக் கொம்புகளும் உள்ளன. அப்புறம் ஏன் அதைக் கண்டு பயம்...?

தாய் மான், "மகனே நீ சொல்வதெல்லாம் சரிதான்... நான் ஓநாயை விட நீ சொன்ன அத்தனை தகுதியும் உடைய வன்தான்... ஆனால் ஒற்றை ஓநாய் குரைத்தாலும் குலை நடுங்கி ஓடும் குணமும் என்னிடம் இருக்கிறதே... அது எப்படி மாறும்...?" என்றது.

எத்தனை தகுதிகள் இருந்தாலும் கோழைக்கு மட்டும் துணிவு என்பது வரவே வராது.




## தப்பித்ததே பெரிசு

ஓநாய் ஒன்று அரக்கப்பரக்க ஆசையுடன் மாமிசத் துண்டுகளை வேக வேகமாக சாப்பிட்டது. அப்படி சாப்பிட்டதனால் அதன் தொண்டைக்குள் பெரிய எலும்புத் துண்டு ஒன்று மாட்டிக் கொண்டது. எலும்புத்துண்டு உள்ளேயும் செல்லவில்லை. வெளியேயும் வரவில்லை. ஓநாயும் எப்படி எப்படியோ தலையை ஆட்டிப்பார்த்தது. எலும்புத்துண்டு தொண்டைக்குழியல் நின்று தொந்தரவு தந்தது. நேரம் செல்லச் செல்ல ஓநாய்க்கு வலி தாங்க முடியவில்லை. வேதனையால் கதறியது. அதன் கதறலைக்கேட்டு காட்டு மிருகங்கள் அங்கு வந்து கூடிவிட்டன. ஐயோ... வலிக்கிறதே, என் தொண்டையில் சிக்கிய எலும்புத்துண்டை யாராவது எடுத்துவிடுங்களேன். என்று ஓநாய் கெஞ்சியது. எந்த மிருகமும் உதவிக்கு வரவில்லை. வலி தாங்க முடியவில்லையே... எனக்கு உதவி செய்தால் அவர்களுக்கு நான் நல்லதொரு பரிசு தருகிறேன் என்று கூறியது ஓநாய். அப்பொழுதும் உதவிக்கு வர மிருகங்கள் தயக்கம் காட்டின.

கொக்கு ஒன்று அந்த நேரம் அங்கு வந்து சேர்ந்தது. கொக்கே... நீயாவது எனக்கு உதவிசெய். தொண்டையில் மாட்டிய எலும்புத்துண்டை எடுத்துவிட்டால் உனக்கு, நீ கேட்கும் பரிசு தருகிறேன் என்று கொக்கைப் பார்த்து பரிதாபமாகக் கெஞ்சியது ஓநாய். கொக்கும் ஒப்புக்கொண்டது. பிறகு ஓநாயின் வாயைத் திறக்கச் சொன்னது. ஓநாயும் தன் பெரிய வாயை அகலமாகத் திறந்தது. கொக்கும் மெதுவாகத் தன் நீண்ட கூடிய அலகை ஓநாயின் வாய்க்குள் செலுத்தியது. பின்னர் மெதுவாக அசைத்து அதன் வாயில் சிக்கியிருந்த எலும்புத் துண்டை வெளியே எடுத்துவிட்டது.

அப்பாடா... இப்பத்தான் நிம்மதி... என்று ஓநாய் மகிழ்ச்சி அடைந்தது. நேரமாகுது, பேசியபடி பரிசைக் கொடுங்கள் என்று ஆவலாய்க் கேட்டது கொக்கு. பரிசா? உனக்கா? அப்போதே கொடுத்து விட்டேனே என்று ஏளனமாய் சொன்னது ஓநாய். எப்போது பரிசு கொடுத்தீங்க? கொக்குக் குழம்பியது. கொக்கு.. நீ ஒரு மக்கு... என்னோடே வாயக்குள்ளே உன் அலகைவிட்டு, அப்புறம் அந்த அலகை வெளியே எடுத் தாயே அதுவே ஒரு பெரிய பரிசுதானே இப்போ நினைச்சாலும் நான் உன்னை அடிச்சு சாப்பிடலாம். தெரியுதா? ஓநாய் கூறிவிட்டு வாய்விட்டுச் சிரித்தது. தகுதி இல்லாதவர்களுக்குச் செய்யும் உதவி நன்மை தராது.



## எவர்க்கானது இந்த உலகம்?



எனக்கானதென்பார் இந்த உலகம்
இல்லையில்லை எனக்கானதேயென்பார்
இன்னும் சிலர்....
எமக்கானதென்பார் அற்ப சிலர்
இன்னுமின்னும் இந்த உலகம்
விந்தையோடு தான் விரிந்து கிடக்கிறது!

அந்தோ தனதென்ற அவனுமில்லை...
எனதென்ற இவனுமில்லை
எமதென்றோர் மட்டும்
இன்னும் மிச்சமாய்....
எனக்கென்று வாழ்வோர்-வீழ்வார்
ஓர் நாள்!
தமதென்று வாழ்வோர்
ஆள்வார் பல நாள்...

ஆற்றங்கரையில் ஆலமரம்
வீற்றிருந்தால் சென்று பாரும்
மற்றமில்லா மனதைத்திறவும்
நேற்று இழந்த காற்றையும்
முந்த நாள் பெய்த மழையையும்
பீற்றிக் கொள்ளும்!- அந்த நாளில்
எந்த நாளும் விந்தை தானே...!

பெய்த மழை இன்று பொய்த்தது!
ஆலமரத்துச் சாளரத்தில்
கோலமிட்டு வாழ்ந்த
குருவி,ஆந்தை,காகம்,குயில்
கூடும் விந்தை! எல்லாம் முந்தை!
கூடுமில்லை, குருவியில்லை
அருவியில்லை- ஆதலால்
ஆறும் இல்லை ஆல் மரமும்
இல்லை....!

தெருவின் மருங்கிலுள்ளோர்
புழுதி முழுகி நின்றோர்
வெயிலில் வெளியில் நின்றார்
உருகி வியர்த்து வெந்தோர்!

தம்பி நீர் அருகில் வாரும்!
அட நீர் தான்...!
எனது என்றீரே?
எது உமது??
புழுதியோ,புழுக்கமா?
புழுக்கமில்லாப் பூமியா
பதில் சொல்லும்...
அறிந்தால் எனக்கானதென்று
இனியாவது நில்லும் ....
உண்மையொரு உலகை
வெல்லும்...!
தன்மையெழில் கொண்ட
பொழில் ஒன்றை
சிருஷ்டியும்...!
பகுத்தறிவாளன் நீர்
படைக்கவும் முடியும் உம்மால்!
உடைக்கவும் முடியும்!

-யாரோ.



# கவிதைப்புனல்



## மனசு

என்னவனே
என் திருமுகத்தை
ஒரு முகமாக்கி
என் அகக்கண்ணில்
சிறை வைத்துள்ளேன்
உன் வாசத்தை சுவாசமாக்கி
உயிர் வாழ்கிறேன்
உன்பசுமையான நினைவுகளை
இதயத்துக்குள் பதியமிட்டு
பாதுகாக்கிறேன்
என்னை நானே
இத்தனை
தயார் செய்தும்
பொருள் தேடி
தூர தேசம்
செல்லும்
உன்னை
பிரிய மறுக்கிறது
என் மனசு

-ஜெயதேஜி.

## புதுமைப்பெண்

ஏறிய பஸ்ஸில எத்தனை பேரோ
என்னோடை உரசல்
அத்தனைக்கும் ஆதாரம்
தேடுவது இரவில் தான்

பெண்மையரின் ஏக்கம்
பலபேருக்கு புரிவதில்லை
அது தானே மோக தாபம்
கட்டில்களில் பெருக்கமாக

ஆயிரத்தில் இருந்தாலும்
பெண்மையரின் எதிர்பார்ப்பு
அதிகம் காமத்தில் தானே

பெண்மைக்கு அதிக அழகு
காதலென்பதால் நீண்ட கனவில்
துயில் கலையும் நினைவுகள்

நிரந்தரமாக ஒருத்தன்
நின் உடலை தீண்டும் வரை
நிவாரணம் கிடைப்பதில்லை

தொலைபேசி சிலவேளை
அழகாகும் கற்பனையின்
மெருகேற்றம்
அதில் கூடும்

-வே.வே.அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.

## விரையும் காலங்கள்

ஆசை ஆசையாக நீ என்னைக்
காதலித்த போது உன் உண்மை
அன்பை புரிந்து கொள்ள
அன்றெனக்கு முடியவில்லை

இன்று என் இதயம் சுமப்பது
உன்னைத்தான் உயிர் வாழும்
வரை உன்னவளாக உன்னோடு
வாழ வேண்டும் ஏங்கித் தவித்து
இதயமே அழுகிறது

உண்மைக் காதலின் சுவாசத்தை
உன்னைக் காதலித்த பின்பே
உண்மையாக சுவாசித்தேன்
காலத்தின் விளையாட்டில் -நம்
காதல் இணையாது என்று
உயிரே நீ சொல்லி விட்டாய்
நம் காதல் உண்மையானது
உன் அன்பான நேசிப்பின்
நினைவுகளோடு
தினம் தினம் வதை செய்யும்
வலிகளோடு இணைந்திட மாட்டோமா?
என்ற இதயத்தின் ஏக்கத்துடன்
உன் நினைவேடு -என்
வாழ்வின் நிமிடங்கள்
நகர்ந்து கொண்டிருக்கின்றன

-இசையவன்,
கிளிநொச்சி.

# காமுகன் கவர்ந்த பூவை...

( 05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்திருக்க வேண்டுமென்றும், சந்தேக நபர் இக்காட்டுப்பிரதேசத்தில் தான் எங்காவது ஒளிந்திருக்க வேண்டும் என்றும் பொலிஸார் சந்தேகித்தனர்.

எனவே பொது மக்களின் உதவியுடன் காட்டுப்பகுதியில் அந்தப் படுபாதகனைத் தேடி அலைய ஆரம்பித்தனர்.

பெரிய தடிகள், தலைக் கவசங்கள், செங்கற்கள் போன்றவற்றை ஆண்களும், பெண்களுமாக கையில் எடுத்துக் கொண்டு சந்தேக நபரை வலை விரித்து காட்டின் மூலை மூடுக்கெல்லாம் தேடினார்கள்.

எனினும் அங்கு வந்திருந்த சிலர் சந்தேகநபர் மக்களுடன் மக்களாகக் கலந்து தப்பித்து விட்டானோ என்றும் சந்தேகித்தனர். இருப்பினும் எதற்கும் தேடுவோம் என்று தமது முயற்சியைக் கைவிடாது தொடர்ந்தார்கள்.

இவ்வாறு சுமார் ஒரு மணித்தியாலங்களுக்கு மேல் தேடுதல் தொடர்ந்த நிலையில் திடீரென, பெண்ணொருவர் முட்கள் நிறைந்த புதரொன்றுக்குள் எட்டிப் பார்த்து இங்கே ஒரு செருப்பு ஜோடியுள்ளது. அவன் இங்கே தான் எங்காவது இருக்க வேண்டும் என்று பலத்த குரலில் கத்தினார்.

எனவே இதனைத் தொடர்ந்து, சந்தேகநபர் இங்கேதான் எங்காவது இருக்க வேண்டும் என்பதை உறுதியாக நம்பினார்கள். அதன் விளைவாக அனைவருடைய கவனமும் காட்டுப் பிரதேசத்திலிருந்த நீர் நிலையின் மீது திரும்பியது.

அந்த நீர் நிலை ஆழமற்ற ஆற்றுப்பகுதியாகவிருந்தபடியால் மக்கள் அனைவரும் கையில் எடுத்து வந்திருந்த பலத்த தடிகளுடன் ஆற்றுக்குள் குதித்தனர்.

அதுமட்டுமின்றி ஆற்றுத் தண்ணீரை தடியால் அடித்தும், துளாவியும் சந்தேக நபரைத் தேடினர். இதன்போது ஒருவர் தண்ணீரைத் தடியால் பலமாகத் தட்டிய போது அது சந்தேக நபரின் தலையில் பட்டுள்ளது.

எனவே தண்ணீரினுள் மறைந்திருந்த சந்தேக நபர் வலி தாங்க முடியாமல் வெளியில் வந்துள்ளான். இதனைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரும் கையிலிருந்த செங்கற்களாலும், தடிகளாலும், தலைக் கவசங்களாலும் சந்தேக நபரின் உடலைப் பதம் பார்க்க ஆரம்பித்தனர்.

அங்கு கூடியிருந்த பொலிஸாரால் கூட, பொதுமக்களை கட்டுப்படுத்த இயலாமல் போனது.

இந்தச் சந்தேக நபர் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், அப்துல் ஜவ்பர் மொஹமட் தவ்பீக் என்ற புத்தளம், பாலாவிப் பிரதேசத்தை சேர்ந்த நபரொருவரே மேற்படி குழந்தையை ஜூஸ் பக்கட் (pakect) ஒன்றினை வாங்கிக் கொடுத்து, அம்மா கூட்டி வரச் சொன்னார்' என்று கூறியே ஏமாற்றிக் கடத்தி சென்றுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்தது.



அதுமட்டு மின்றி குறித்த நபர் 2008 ஆம் ஆண்டு சிறுமியொரு வரைப் பாலியல் துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்திய குற்றத்துக்காக சிறைக்குச் சென்று சம்பவ தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முதல் தான் விடுதலையாகி யுள்ளான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் சந்தேக நபர் வீடுகளை உடைத்துத் திருடுவது, வழிப்பறிக் கொள்ளை போன்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவன்.

இந்தச் சிறுமியின் குடும்பப் பின்னணி தொடர்பாக நோக்குமிடத்து, சிறுமியின் பெற்றோருக்கு இரட்டைக் குழந்தைகள் உட்பட மூன்று குழந்தைகள் இருக்கின்றனர்.

இவர்களில் கடத்தப்பட்ட சிறுமி இரட்டைக் குழந்தைகளில் ஒருவராவார். சிறுமியின் தந்தைக்கு நிரந்தர தொழிலொன்றும் கிடையாது. ஒரு தோட்டத்தைப் பராமரித்து அங்கு அன்றாடம் கிடைக்கும் கூலி வேலைகளைச் செய்து தனது குடும்பத்தை நடாத்தி வந்ததுடன், அத்தோட்டத்திலிருந்த சிறிய கொட்டிலிலேயே வசித்து வந்துள்ளனர்.

இருப்பினும் சிறுமியின் தந்தை இரு பெண் குழந்தைகள் மீதும் எப்போதும் எச்சரிக்கையாகவே இருந்து வந்துள்ளார்.

தினமும் முச்சக்கர வண்டியிலேயே பிள்ளைகள் இருவரும் பாடசாலைக்கு சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

சம்பவம் இடம்பெற்ற தினமான 2015.06.01 ஆம் திகதி பாடசாலையில் தான நிகழ்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதனால் பாடசாலை நேர காலத்தோடு முடிவடைந்தது. இந்த நிலையில் குறித்த சிறுமி தமது முச்சக்கர வண்டி வரும் வரை வாசலில் காத்திருந்த போதே இவ்வாறு சந்தேக நபரால் கடத்தப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த 2ஆம் திகதி புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, மீண்டும் ஜூன் மாதம் 10ஆம் திகதி ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இதன்போது இக்கடத்தல் சம்பவத்தை கண்டித்து, புத்தளம் நீதிமன்றத்துக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்பாட்டமொன்றை மக்கள் நடத்தினர்.

அதுமட்டுமின்றி, இவ்வாறான குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு ஜனாதிபதி தலையிட வேண்டும் எனக் கலந்து கொண்டோர் கருத்து தெரிவித்ததுடன்,

சிறுவர் உலகைப் பாதுகாப்போம் அச்சமின்றி சுதந்திரமாக கற்பதற்கு வழி ஏற்படுத்துங்கள், காம வெறியர்களிடமிருந்து சின்னஞ் சிறு மலர்களைப் பாதுகாப்போம், அனைத்து சிறுவர்களுக்குமாக இந்தக் குற்றவாளியை விடுதலை செய்ய வேண்டாம் போன்ற பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டோர் காணப்பட்டனர்.

சிறுமியின் தாயார் இக்கடத்தல் சம்பவம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்

இவ்வாறான காடையர்களை தயவு செய்து வெளியில் விட வேண்டாம். ஒவ்வொரு தாய்மார்கள் சார்பிலும் நான் இதை உங்களிடம் கேட்கின்றேன்.

இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி மரணதண்டனை வழங்குங்கள்.

அதனை விடுத்து இவர்களைக் கைது செய்து மீண்டும் பிணையில் வெளியில் விடுவதால் தான் இவ்வாறான குற்றச்செயல்கள் தொடர்ந்து எமது நாட்டில் நடைபெற்ற வண்ணமே இருந்து வருகின்றன.

இது போன்ற சம்பவங்களினால் இந்நாட்டிலுள்ள தாய்மார்களுக்கு இனிமேலும் இவ்வாறு தங்கள் பெண்பிள்ளைகளுக்காக கண்ணீர் சிந்தும் நிலைமைகள் தொடராதி ருக்க குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்குங்கள். என்று கண்ணீர் விட்டவாறு கூறினார்.

எனவே, எது எவ்வாறாயினும், பெண்பிள் ளைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உணர்வுரீதியாகவும், விழுமியரீதி யாகவும் ஒவ்வொரு மனிதனுள்ளும் தோன்ற வேண்டுமென்பது இன்றைய காலத்தின் தேவையாகும்.

# நீங்கள் வாழ்க்கையில்...

( 08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாக செலவிட வேண்டி வரும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்

**நான்காம் நிலை:** சில நேரங்களில் நாம் மிகவும் விரும்பிச் செய்யக் கூடிய வேலைகளைக் கூடத் தள்ளிப் போட நேரிடுகிறது. உதாரணமாக நல்ல அழகான கண்ணாடி ஓவியம் செய்து, புதிதாகக் கட்டிய நம்முடைய வீட்டின் வரவேற்பறையில் மாட்ட வேண்டும் என்ற ஆசை. நம்முடைய மற்றப் பணிகள் மற்றும் பொறுப்புகள் காரணமாக இது தள்ளிப் போய்க்கொண்டே இருக்கலாம். கை வேலைகள் செய்கின்ற வேறு நண்பரையோ அல்லது பயிற்சி வகுப்பின் மூலமாகவோ ஒரு ஊக்கச் சக்தியைப் பெற்று, மளமளவென வேலையை முடிக்க முயல வேண்டும். அப்படி ஒரு வேலையை முடிக்கும் பட்சத்தில் அதை நமக்குப் பிடித்த உணவோடு, குடும்பத்துடன், கொண்டாடலாமே. சில நேரங்களில் ஒரு காரியத்தில் இறங்கும் போது, அதனால் அவமானப் பட்டுவிடுவோமோ அல்லது தவறாகப் போய்விடுமோ என்ற அச்சம் காரணமாகக் கூட தள்ளிப் போட்டுக் கொண்டே இருப்போம். இது போன்ற நேரங்களில் நாமே நன்றாக சிந்தித்து, எதற்காக அஞ்சுகிறோம் என்பதைக் கண்டறிந்து, அதனைத் தவிர்க்கப் பார்க்க வேண்டும். முடியவில்லையென்றால், நண்பர்களிடம் ஆலோசனை பெற்றாவது, அக் காரியத்தைத் தொடர முயற்சிக்க வேண்டும். அந்தக் காரியத்தின் மூலம் நமக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்கின்ற பட்சத்தில் அதை எப்படியாவது முடிக்க முயல வேண்டும்

அமெரிக்க வல்லுனர்களான ரீட்டா மற்றும் ஜூலி ஆகியோரின் ஆலோசனைப்படி, அன்றாடம் முடிக்க வேண்டிய வேலைகளைக் குறிப்பெடுத்து வைத்துக் கொண்டு, அதனைத் தம் கைப்பட எழுதிக் கொள்ள வேண்டும்.

தேவையான ஓய்வு எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வேலை செய்யும் நேரத்தை நம்மையறியாமல் அது கைப்பற்றிவிடும்.

மிகவும் சலிப்படையச் செய்யக் கூடிய நீண்ட வேலையாக இருக்கும் பட்சத்தில், அதைப் பிரித்து ஒரு வாரத்திலோ அல்லது மாதக் கணக்கிலோ குறிப்பிட்டு நிர்ணயித்து சலிப்படையாமல் செய்து முடிப்பதற்கு வழி வகுத்துக் கொள்ள வேண்டும்.

தொலைபேசியில் பேசுவது, படிப்பது, எழுதுவது, இப்படிப்பட்ட மன உற்சாகம் அளிக்கக் கூடிய செயல்களுக்காகவும் நேரம் ஒதுக்க வேண்டும்

மேற்கண்ட அனைத்து விசயங்களையும் உள் வாங்கி, செம்மையாக நம் கடமையை நேரந்தவறாமல் செய்யும் போது, வெற்றி நிச்சயம்தானே!

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்



# நோயாளிகளின் புண்களை எவ்வாறு பராமரிப்பது?

'வயதான ஒருவரை வீட்டில் வைத்துப் பராமரிப்பதே முடியாத காரியமாக இருக்கிறது. இது அந்திம காலம் என்கிறீர்கள். அத்துடன் குணப்படுத்தவே முடியாத புண் எனவும் சொல்கிறீர்கள். வீட்டை வைச்சுப் பராமரிக்கிறது முடியிற காரியமா?' என்று கேட்க வாய் எழுகிறதா?

உண்மைதான் இது அவசர யுகம். தலைக்கு மேல் வேலைகள். போதக்குறைக்கு நகர்ப்புற சிறிய வீடுகள். மாறாத புண்களை அதுவும் நாற்றம் அடிக்கிற புண்களை வீட்டில் வைத்துப் பராமரிப்பது முடிகிற காரியமா. வயோதிபர் இல்லதில் போடு அல்லது ஆஸ்பத்திரியே தஞ்சம் என்றே பலரும் எண்ணுவார்கள்.

ஆனால் அதுதான் இறுதி முடிவா?

மரணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது. சில நாட்களே அல்லது சில வாரங்களே தாக்கும் பிடிக்கும். இந்த நிலையில் வேறு இடங்களில் நோயாளியைப் 'போடுவதால்' எந்தவித நன்மையும் இருக்க முடியாது. பெருமளவு பணச் செலவும் அவர்களை நிர்க்கதியாகக் கைவிட்ட குற்ற உணர்வும்தான் மிஞ்சும். எல்லோராலும் கைவிடப்பட்டது போன்ற ஏக்க உணர்வு அந்திமநிலையில் உள்ள நோயாளியை மேலும் வருந்தச் செய்யும்.

**அந்திம கால நோயாளிகளின் புண்கள்**

அந்திம கால நோயாளிகளில் ஏற்படும் புண்களில் புற்றுநோயால் வருவது ஒரு வகை. படுக்கைப் புண் மற்றொரு வகை. புற்றுநோய் போன்றவற்றால் வரும் புண்களைப் இன்று பார்ப்போம். வாய் புற்றுநோய், மார்புப் புற்றுநோய், சருமப் புற்றுநோய் போன்றவை சில உதாரணங்களாகும்.

இவற்றால் எழும் கடும் வலி, கெட்ட நாற்றம், நிணமும் சீழும் வடிதல், குருதி வடிதல், அருவருப்பான தோற்றம் போன்றவை நோயாளியின் மனதையும் உடலையும் கடுமையாக வருத்தும். மற்றவர் முன் வரவோ பேசவோ முன்வராது ஒதுங்கி இருக்கத் தூண்டும். சில தருணங்களில் அவற்றில் புழுப் பிடித்து (maggots) விடுவதும் உண்டு.

புற்றுநோய்க் கலங்கள் வேகமாகப் பெருகுவதால் அவற்றிற்கான குருதி மற்றும் ஒட்சிசன் கிடைக்காததால் அவை அழுகுவதே புண்ணாவதற்குக் காரணமாகும். அதில் கிருமிகள் தொற்றுவதாலேயே கெட்ட நாற்றம், சீழ் வடிதல் மற்றும் இரத்தக் கசிவு ஏற்படுகிறது.

இத்தகைய புண்களை முற்று



முழுதாகக் குணப்படுத்துவது முடியாத காரியமாகும். அதே நேரம் அவர்களைத் தினமும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்வதும் அவர்களது மோசமான உடல் நிலையில் முடியாத காரியமாகும்.

இது அவர்களைக் கைகழுவி விடுவது என்ற அர்த்தத்தில் இல்லை.

அவர்களது புண்களை முற்றா கக் குணமாக்க முடியாதபோதும் சரியான சிகிச்சை மூலம் வேதனை, மணம், சீழ் வடிதல் போன்ற தொல்லை கொடுக்கும் அறிகுறி களைத் தணிக்க முடியும். அத்து டன் நோயாளிகளாலும்; குடும்பத்தவர்களாலும்; ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு மனத் திருப்தி கிட்டக் கூடியதாக வும் இருக்கும். இச்சிகிச்சை முறை அவர்களது பொருளாதார நிலைக்குக் கட்டுபடியாவதாகவும் இருக்கும்.

இந்தச் சிகிச்சையின் போது மருத்துவர் தாதி மற்றும் மருத்துவ உதவியாளர்கள் அயலவர்கள் போன்றோரின் உதவிகளை தேவையான வேளைகளில் பெற வேண்டும். உண்மையில் இது ஒரு கூட்டு முயற்சியாகும்.

**பராமரிப்பு**

மேற்படி புண்களைக் கட்டுப் படுத்துவதில் ரேடியம் சிகிச்சை, வேதியல் மருத்துவம் (Chemotherapy) போன்றவை இன்னமும் உதவக் கூடிய நிலையா யின் மருத்துவர் அதற்கான ஆலோசனையை வழங்குவார். அதேபோல சிதைவடைந்து கிடக்கும் புண்ணின் அழுக்குகளை சிறிய சத்திரசிகிச்சை மூலம் அகற்ற வேண்டுமாயின் அதுவும் மருத்துவர் செய்ய வேண்டியதே.

**வலி கிருமித் தொற்று**

கிருமித் தொற்று காரணமாக இருந்தால் மருத்துவ ஆலோ சனையுடன் தேவையான அன்றிப யோற்றிக் (antibiotic) மருந்து களை வாயினாலோ நாளங்கள் ஊடாகவே கொடுக்க வேண்டும்.

மருந்து கட்டும்போது நோயா ளிக்கு வலி ஏற்படாது இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். புண் களைச் சுத்தம் செய்து மருந்து கட்டுவதற்கு 10-15 நிமிடங் களுக்கு முன்னர் அவ்விடத்தில் வலியைத் தணிக்கும் ஜெல் மருந்தைப் பூசுவதன் மூலம் இதைச் செய்யலாம். இதற்கான Lignocaine gel மருந்து இலங்கையிலும் கிடைக்கிறது.

மருந்திடும்போது நோயாளியின் உடலைத் திருப்புதல், கை கால் களை மடக்கி நீட்டுதல் போன்ற உடல் அசைவுகள் கடுமையான வலியை ஏற்படுத்தக் கூடும். அதைக் கட்டுப்படுத்த Ketamine sublingual மருந்தை நாக்கிற்கு

( 22 ஆம் பக்கம் பார்க்க)



> எனக்கு சினிமாவில நடிக்க வேணுமென்னு ரொம்ப ஆசை. சுத்தி இருக்குறவங்க எல்லாம் சென்னைக்குப் போனாத்தான் சினிமாவில நடிக்க முடியுமென்னு பேசுறது கேட்டுட்டு, எங்க அக்கா வேலைக்கு போய் வாங்கி வச்சிருந்த சம்பளம் 400 ரூபாய எடுத்துட்டு ரயில் ஏறி சென்னை வந்துட்டேன். இங்க எனக்கு யாரையுமே தெரியாது. நடிக் கனும் என்கிற ஆர்வம் மட்டும் கொழுந்துவிட்டு எரிஞ்சது.



- ந.ஆஷிகா

# 76 ஆண்டுகள் காத்திருந்த காக்காமுட்டை பாட்டி!

"50 வருஷத்துக்கும் அதிகமாவே சினிமாவில இருக்கேன். இப்போதுதான் எனக்கு பெரிய அங்கீகாரம் கிடைச்சுருக்கு"

– வெற்றிலை போட்டபடி தெரிவிக்கின்றார் காக்காமுட்டை படத்தில் நடித்த சாந்திமணி பாட்டி.

"என் உண்மையான பெயர் சரோமி தையம். பிறந்து வளர்ந்தது எல்லாமே சேலம். என் கூட பிறந்தவங்க ஆறு பேர். எல்லாரும் படிச்சு நல்ல நிலையில, பெரிய பெரிய வேலையில இருக்காங்க. எனக்கு மட்டும் அப்போதிருந்தே சினிமா மேல கொள்ளை ஆசை. சினிமாவில எப்டியாவது பெரிய நடிகையாகிட வேணுமென்னு ஒரு வெறி. அப்போது எங்க தெருல தெருக்கூத்து நடக்கும். அதைப் பாத்து பாத்து எனக்கு சினிமாவில நடிக்க வேணுமென்னு ரொம்ப ஆசை. சுத்தி இருக்குறவங்க எல்லாம் சென்னைக்கு போனாத்தான் சினிமாவில நடிக்கமுடியுமென்னு பேசுறது கேட்டுட்டு, எங்க அக்கா வேலைக்கு போய் வாங்கி வச்சிருந்த சம்பளம் 400 ரூபாய எடுத்துட்டு ரயில் ஏறி சென்னை வந்துட்டேன். இங்க எனக்கு யாரையுமே தெரியாது. நடிக்கனும் என்ற ஆர்வம் மட்டும் கொழுந்துவிட்டு எரிஞ்சது .

சேலத்தில இருந்தபோது அங்கே மார்டன் தியேட்டருக்கு எஸ்.ஆர்.ஜானகி அம்மா வருவாங்க. அப்போ பழக்கம். சென்னைக்கு வந்ததும் நேரா அவங்க வீட்டுக்கு போனேன். எனக்கு முழு ஆதரவு கொடுத்தது அந்த அம்மாதான். நாடகத்தில் நடித்தால்தான் சினிமாவில் நடிக்க வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லி, பக்கத்து தெருவில் இருந்த குடந்தை மணி அணியில் என்னைச் சேர்த்துவிட்டார். ஆறு மாதங்கள் எனக்கு பயிற்சி அளித்தார். மேடையேறி பேசவே அவ்வளவு பயம் எனக்கு. அதனாலேயே 'பீச்சில்' போய் உட்கார்ந்து கத்தி கத்தி 'டயலாக்' பேசிப் பழக சொல்லுவார். நானும் அப்படியே செய்தேன். அவர் நாடகங்களுக்கு அசோசியட் டைரக்டராக இருந்ததுடன், நாடகங்களிலும் நடித்தார். பின்னர் ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாடகத்தில் நான் ராணியாகவும், அவர் ராஜாவாகவும் நடித்தோம். அடுத்தடுத்த 20க்கும் மேற்பட்ட நாடகங்களில் சேர்ந்து நடித்தோம்.

பின்னர், ஒரு கட்டத்தில் நாடக கம்பனி நஷ்டமடைய, நடிப்புக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் எனக்கு சம்பளமே வேண்டாம் என்று நடித்தேன். பின்னர் தேவி நாடக சபாவில் இணைந்து நடிக்க கற்றுக் கொண்டேன். எஸ்.ஆர். ஜானகி அம்மாவே என்னை அழைத்துச் சென்று நடிகர் சங்கத்தில் என்னை உறுப்பினராகச் சேர்ந்து விட்டார். அதன் தலைவராக இருந்தவர் எஸ்.எஸ்.ஆர். அப்போது எனக்கும், குடந்தை மணிக்கும் காதல். இருவரும் வேறு வேறு மதம் என்பதால் வீட்டில் ஒப்புக் கொள்ளவேயில்லை.

பின்னர் என் கணவர் என் பெயரை சாந்தி என்று மாற்றினார். இருவரது வீட்டிலும் பலத்த எதிர்ப்பு. ஒரு வழியாக மாமியார் வீட்டில் ஒப்புக்கொண்டார்கள். திருமணம் ஆனதும் சினிமா வேண்டாம் என்று சொல்லி, என் கணவரின் சொந்த ஊரான கும்பகோணத்திற்கு அழைத்துச் சென்றார். அதற்கு பிறகு 15 வருடங்கள் சினிமாவை விட்டே விலகியிருந்தேன். சினிமாவில் நடிக்க வேண்டும் என்று வந்தோம். ஆனால் குடும்பம், குழந்தை என்று சினிமாவை விட்டே விலகியிருக்க வேண்டியதாய் இருக்கிறதே என்று அழுதேன். திருமணமாகி ஐந்து வருடங்கள் எனக்கு குழந்தையில்லை. பின்னர் ஒரு வழியாக ஐந்து வருடங்கள் கழித்து எனக்கு பெண் குழந்தை பிறந்தது. அடுத்தடுத்து நான்கு குழந்தைகள் பிறந்தன. சினிமாவில் எனக்கு இந்த பாத்திரம் என்று நினைத்தேதான், என்னுடைய நிஜவாழ்க்கையை வாழ்ந்தேன்.

அப்போது நிறைய வறுமை வேறு. கணவரும் அடிக்க ஆரம்பித்தார். நீ இருப்பதால்தான் என்னால் டைரக்டர் ஆக முடியவில்லை. குழந்தைகளை என்னிடம் விட்டுவிட்டு நீ எங்கயாவது போய்விடு என்று என்னை தொடர்ந்து அடிக்க ஆரம்பித்தார். இருவீட்டிலும் எனக்கு ஆதரவில்லை. மாமியாரோ குழந்தைகள் வேண்டுமென்றால் பொறுத்துக் கொண்டிரு என்று சொல்லிவிட்டார். சொல் பேச்சு கேக்காமல் சினிமாவில் தான் நடிப்பேன் என்று வீட்டை விட்டு ஓடியதால், எங்கள் வீட்டில் சுத்தமாக பேசக்கூட முடியாது.

இந்த நிலையில், நான் என்ன செய்ய முடியும்? ஒரு வழியாக குழந்தைகளை அவரிடமே விட்டுவிட்டு நான் மட்டும் மீண்டும் ரயிலேறி சென்னை வந்துவிட்டேன். இங்கே வந்து கோடம்பாக்கத்தில் ஏ.எஸ்.மணி என்பவரது வீட்டில் தங்கிக் கொண்டு நடிக்கச் செல்வேன். தமிழ் படங்கள் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம், மலையாளப் படங்களில் எல்லாம் நடித்திருக்கிறேன்.

அந்தக் காலத்தில் நான் நல்ல உயரமாக இருந்ததால் என்னை 'ஸ்டன்ட்' நடிகையாக மாற்றினார்கள். ஒரு நாள் 'ஸ்டன்ட்' சென்று வந்தால் 500 ரூபாய் வரை கிடைக்கும். எந்தப் பணத்தையும் நான் எடுத்துக் கொள்ள மாட்டேன். அப்படியே ஏ. எஸ்.மணியிடம் கொடுத்துவிடுவேன். குழந்தைகள் வளர்ந்ததும் ஒவ்வொருவராக என்னிடம் வந்து விட்டார்கள். பின்னர் குழந்தைகளுக்கு மட்டும் தனிவீடு பார்த்து தங்கவைத்தேன். நான் மட்டும் கோடம்பாக்கத்தில் இருந்து கொண்டு திரைப்படங்களில் நடித்தேன். ஒரு சீன், இரண்டு சீன் என்று நடித்துக் கொடுத்தால் அப்போது பத்து ரூபாய் தான் கிடைக்கும். பின்னர் குதிரை ஓட்டவும் கற்றுக் கொண்டேன்.

பல திரைப்படங்களில் சின்ன சின்ன வேடங்களில், கூட்டத்தோடு கூட்டமாக நடித்திருக்கிறேன்" என்றவர் தொடர்ந்து காக்காமுட்டை வாய்ப்பு குறித்து பேசினார்.

நடிகர் சங்கத்தில் மெம்பராக இருப்பதால் பாட்டி வேடம் என்று சொல்லி என்னை அழைத்தார்கள். என்னோடு 27 பேர் வந்திருந்தார்கள். 27 பேரும் வரிசையாக நிற்க, மணிகண்டன் என்னைத் தேர்வு செய்தார். பிறகு தொடர்ந்து படப்பிடிப்பு வேலைகளில் கலந்து கொண்டேன். இன்னொரு பெரிய பிரச்னையாக, தவமிருந்து பெற்ற மூத்தப் பெண்ணுக்கு உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் சேர்ந்திருந்தார்கள். சிகிச்சை பலனளிக்காமல் அவள் இறந்தும் விட்டாள்.

'சூட்டிங்' முடிந்து ஒரு வருடம் வரை படம் திரையிடப் படவில்லை. எனக்கு மிகவும் கஷ்டமாகிப் போச்சு. என்னைப் பார்த்து என் மூத்த பொண்ணு கற்பகமும், சினிமாவில் சின்ன சின்ன கதாபாத்திரங் களில் நடித்தாள் 'டப்பிங்' பேசினாள். நான் சினிமாவில் பெரிய இடத்திற்கு வர வேண்டும் என்று பெரிதும் விரும்பினாள். ஆனால் இந்த வெற்றியை பார்ப்பதற்கு முன்னதாகவே இறந்தும் விட்டாள்.

முதல் நாளே மினி உதயம் தியேட்டரில் போய் மகள், பேரன் பேத்திகளுடன் திரைப்படம் பார்த்தேன். என்னை 'ஸ்கிரீனில' பார்க்க மிகவும் சந்தோசமாக இருந்தது. வெளியில வந்தவுடன் அப்படியே 'ரவுண்ட்' கட்டிவிட்டார்கள். பாட்டி இங்க வாங்க...னு பிடிச்சு இழுத்து போட்டோ எடுத்தாங்க. ரொம்ப சந்தோசமா இருந்தது. தியேட்டர்ல நான் வர்ற சீன்ல கைதட்றத பாத்து கண்ணுலயிருந்து தண்ணியே வந்துருச்சு எனக்கு.

செத்துப் போனா கூட நிம்மதியா செத்துபோவேன். அவ்வளவு சந்தோசம்... 76 வருசம் கஷ்டப்பட்டதுக்கு இப்போதான் பலன் கிடச்சுருக்கு. சினிமாவில் தடம் பதிக்காமல் சாகக்கூடாது என்று வைராக்கியமாக இருந்தேன். அதுக்கு இப்போதான் பலன் கிடச்சுருக்கு. சாகுற வரைக்கும் நடிக்கணும். அது தான் என்னுடைய ஆசை" ஆனந்தக் கண்ணீர் வழிய விடை பெறுகிறார் சாந்திமணி பாட்டி.

இவ்வார

# இராசி பலன்

01.07.2015 –07.07.2015

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**மேஷம்**

குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி இருக்கும். பணிகள் திட்டமிட்டபடி நிறைவேறும். நண்பர், உறவினரின் உதவி கிடைக்கும். வீட்டை அழகுபடுத்துவீர்கள். பூர்வச் சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். புத்திரர்கள், உங்கள் சொல் கேட்டு செயல்படுவர். இல்லறத் துணையின் பாசமழையில் நனைவீர்கள். தொழிலில் வளர்ச்சிக்கான பாதை உருவாகும். பணியாளர்கள், கடமையில் கண்ணும், கருத்துமாகச் செயல்படுவர். பெண்கள், குழந்தைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்கு, ஞாபகத்திறன் வளரும்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**ரிஷபம்**

சுயதிறமை மேம்படும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு பின்பற்றவும். புத்திரர்களின் தாழ்வு மனப்பான்மை விலக, அறிவுரை சொல்வீர்கள். உடல்நிலை பலம் பெறும். இல்லறத் துணையின் கருத்தை மதிப்பீர்கள். தொழிலில், வியாபாரம் செழித்து, பணவரவு கூடும். பணியாளர்களுக்கு சலுகை, சன்மானம் கிடைக்கும். பெண்கள், கணவரின் எதிர்கால நலன் சிறக்க பாடுபடுவர். மாணவர்கள், நன்றாக படிப்பர்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**மிதுனம்**

சோம்பலைத் தவிர்ப்பதால் பணிகள் நிறைவேறும். வீண் பேச்சு பேசுவோரிடம் வில்கவும். பண வரவு அதிகம் பெற புதிய வாய்ப்பு வரும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயல்களை நல்வழிப்படுத்துங்கள். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத்துணை இணக்கமாகச் செயற்படுவார்.

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கடகம்**

வாகன பராமரிப்பு செலவு குறையும். புத்திரர்கள், விரும்பிய பொருள் கேட்டு பிடிவாதம் செய்வர். உடனிருந்து இடையூறு செய்வோரை அறிந்து விலகிக் கொள்ளுங்கள். முக்கிய செலவுகளுக்காக, கடன் பெறுகிற சூழ்நிலை உண்டு. இல்லறத் துணை, உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் ஓரளவே லாபம் கிடைக்கும். பெண்களுக்கு, வீட்டுச்செலவுக்கு ஓரளவே பணம் இருக்கும்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

புத்திரர்கள், அ சில விவகாரங்களில், சுமுகத் தீர்வு கிடைக்கும். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். பணியாளர்கள், சேமிக்கும் அளவு சம்பாதிப்பர். பெண்கள், புத்தாடை அணிகலன் வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் நன்றாகப் படித்து பரிசு, பாராட்டு பெறுவர்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**கன்னி**

புத்திரர்களின் பிடிவாதப் போக்கை, இதம் பதமாக சரி செய்யுங்கள். எதிரிகளிடம் இருந்து விலகவும். இல்லறத் துணை, குடும்பத்திற்கு நற்பெயர் பெற்றுத்தரும் வகையில் செயல்புரிவார். தொழில், வியாபாரம் செழித்து, பணவரவு கூடும். பணியாளர்கள், பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்களுக்கு, வீட்டுச் செலவுக்கு தாராள பணவசதி இருக்கும். மாணவர்கள், ஆசிரியர், பெற்றோரிடம் நற்பெயர் பெறுவர்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**துலாம்**

புத்திரர்கள், உங்களுக்கு பெருமை தேடித் தருவர். சீரான ஓய்வு, உடல் நலம் காக்கும். இல்லறத் துணையின் மனதில் சஞ்சலம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள், சக பணியாளர்களை நம்பி வேலைகளை கொடுக்க வேண்டாம். பெண்கள், குடும்ப நலனில் மட்டும் அக்கறை கொள்ளவும். மாணவர்கள், நண்பரால் நன்மை அடைவர்.

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**விருச்சிகம்**

நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் கவுரவம் கிடைக்கும். பயணங்களை பயன் அறிந்து மேற்கொண்டால் போதும். புத்திரர்கள் நண்பர்களைப் போல பழகி, மனதை மகிழ்ச்சிப்படுத்துவர். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, சில மாற்றங்களை செய்வீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை பின்பற்றினால், சிரமத்தை தவிர்க்கலாம். பெண்கள், கோவில்களுக்கு சென்று வருவர். மாணவர்கள் சிறப்பாக படித்து, நற்பெயர் பெறுவர்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தனுசு**

நேர்மையாக நடந்தும் அடைந்த கஷ்டங்களுக்கு, தெய்வ அருளால் தீர்வு கிடைக்கும். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்களின் எதிர்கால நலனுக்கு தேவையானதை செய்வீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். இல்லறத் துணையின் கருத்துகளை ஏற்பீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை குறைந்த அளவில் இருக்கும். பணியாளர்கள், செலவில் சிக்கனம் மேற்கொள்வதால், கடன் வாங்குவதை தவிர்க்கலாம்.

**திருவோணம், அவிட்டம்1, 2ஆம்பாதங்கள்**

**மகரம்**

குரு, கேதுவும் நற்பலன் தருவர். பொறுமையுடன் செயல்பட்டு, எதிர்ப்புகளை வெல்வீர்கள். உடன் பிறந்தவர்களுக்கு, மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. புதிய வாகனம், வீடு வாங்க யோகம் உள்ளது. புத்திரர்களின் செயல்பாடுகளில், நல்ல மாற்றம் வரும். கடன்களை செலுத்துவீர்கள். இல்லறத் துணையுடன் கருத்து வேறுபாடு வரலாம்; தொழில், வியாபாரம் வளர, முக்கியஸ்தர்களின் ஆலோசனையை ஏற்பது நல்லது. பணியாளர்கள், கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்**

**கும்பம்**

அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு. வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர்களின் குறையை பொறுப்பதால், அவர்கள் நல்வழியில் செயல்பட வாய்ப்பு உருவாகும். ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம். இல்லறத் துணையின் மனம் அமைதி பெறும் வகையில், ஆறுதலாக நடந்து கொள்ளுங்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் தங்கள் பணிகளை முடிக்க தாமதம் ஆகலாம். பெண்களுக்கு, வீட்டுவேலை பார்க்க சற்று சிரமம் இருக்கும். மாணவர்கள், நன்றாக படிப்பர்.

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மீனம்**

குடும்பத்தில் ஒற்றுமை வளரும். வாகனத்தில் செல்லும் போது, வேகத்தை குறைக்கவும். புத்திரர்களின் நற்செயல்கள் கண்டு, பெருமிதம் கொள்வீர்கள். கடன்களை செலுத்துவீர்கள். இல்லறத் துணையின் அன்பும், பாசமும் முழு அளவில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, புதியவர்களின் ஆதரவு துணை நிற்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து, அதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவர். பெண்கள், மங்கல நிகழ்ச்சிகளில் பங்கேற்பர்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 92

● அடேல் பாலசிங்கம்



நிலைமை பாரதூரமாகிவிட்டதை உணர்ந்த எம்.ஜி.ஆர் கைப்பற்றப்பட்ட சாதனங்களை உடனே திருப்பி ஒப்படைக்குமாறு ஆணை பிறப்பித்தார். பல்வேறு செய்தி ஊடகர்கள், உள்ளூர் அரசியல் தலைவர்கள், பெருந்திரள் ஆதரவாளர்கள் ஆகியோரின் மத்தியில் ஆயாசம் அடைந்த, ஆனால் மன உறுதியும் விடாப்பிடியும் கொண்ட பிரபாகரன் தமது நாற்பத்தியெட்டு மணி நேர உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். பல வாரங்களின் பின்னர் பிரபாகரனுடனும், பாலாவுடனும் முதலமைச்சர் நீண்ட நேரம் கலந்துரையாடினார். அதன் பின்னர் புலிகளிடம் இருந்தும் ஏனைய போராளிக் குழுக்களிடம் இருந்தும் பறித்தெடுத்த ஆயுதங்கள் அனைத்தையும் புலிகளிடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர் ஆணையிட்டார்.

போராட்டத்தைப் பொறுத்த வரையிலே பிறர் மீது தங்கியிருக்கலாகாது என்பதில் எப்போதுமே உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருந்த பிரபாகரன் அவர்கள் உண்ணாவிரதம் முடிந்த சில வாரங்களில் இந்தியாவின் பிடியிலிருந்து விலகி யாழ்ப்பாணத்தில் இருந்து சுதந்திரமாக இயங்குவதற்கான திட்டங்களைத் தீட்டினார். இந்தியக் கரைகளில் இருந்து 1987 முற்பகுதியில் இரகசியமாக அவர் வெளியேறி தமது தாயகத்தை அடைந்தார். பாலாவும் நானும் சென்னையில் தரித்திருந்து நாம் வெளியேறும் காலம் வரும் வரை எமது அரசியல் பணிகளை தொடர வேண்டும் என்று கேட்கப்பட்டோம். ரஜீவ் நிர்வாகம் மேற்கொண்ட நெருக்குவார அடாவடித்தன ராஜதந்திரத்தினால் ஏற்பட்ட நீண்டகால கசப்பான அனுபவம் விடுதலைப்புலிகளின் இதயங்களில் ஆழமான வடுவை ஏற்படுத்தியிருந்தது. இந்திய அரசியல் அமைப்பின் உள்ளார்ந்த சிக்கல்கள், முரண்பாடுகள் பற்றிய தெளிவான புரிந்துணர்வையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் அப்போதைக்கு இடம்பெற வாய்ப்பில்லை என்பதும் தெளிவாகத் தெரிந்தது. தமிழ் மக்களுக்கு எதிரான 1983 ஆம் ஆண்டு வன்முறைகளுக்குப் பின்னர், தமிழ் மக்களின் அரசியல் போராட்ட வரலாற்றில் 1987ஆம் ஆண்டானது கொந்தளிப்பான ஒரு முக்கிய காலகட்டமாக விரியத் தொடங்கியது. இந்த ஆண்டிலேயே இந்தியத் தலையீடானது எதிர்பாராத திருப்பத்தை ஏற்படுத்தியது. தமிழ் மக்களின் உளப்பாங்கிலும் அரசியலிலும் ஆழமான தாக்கங்களையும் பதித்தது.

### இந்திய - புலிகள் யுத்தம்

"அதென்ன் இடிச்சத்தமா?" யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் உள்ள எங்கள் வீட்டில் போராளி ஒருவரிடம் நான் வினவினேன், வீட்டு விறாந்தையில் நின்றபடி வெளியே பார்த்தேன். காலை வேளை. நிர்மலமான வானம். தூரத்து இடி முழக்கம் காதில் விழுந்து கொண்டிருந்தது.

(பதிவு தொடரும்)

# குழந்தைகளை சாப்பிட வைப்பது எப்படி?

குழந்தைகளுக்கு உணவு ஊட்டுவது ஒரு கலை. ஆனால் அதை மிகவும் கஷ்டமான காரியமாக நினைத்து, சில பெற்றோர் பிரயத்தனம் செய்கின்றனர். ஏனெனில் கொடுக்கும் உணவை, வயிறு நிறையும் வரையில் சமர்த்தாக சாப்பிடும் குழந்தைகள் மிகக்குறைவு.



சில குழந்தைகள் உணவை விழுங்காமல், அப்படியே வெளியே தள்ளி விடுவார்கள். குழந்தைகளின் உண்ணும் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்ய அவர்களுக்கு ஏற்ற உணவுகளைத் தயாரித்து அளிக்க வேண்டும் என்கின்றனர் குழந்தை நல மருத்துவர்கள். குழந்தைகளுக்கு மூன்று மணி நேரத்துக்கு ஒருமுறை, சிறிதளவு ஆகாரம் கொடுப்பது அவசியம். அதில் மூன்று முறை சோறு, காய்கறி உள்ளிட்ட உணவுகளும், ஜூஸ், பால் போன்றவற்றையும் கொடுப்பது அவசியம். தயிர் சாதம், காரட் மசியல், பழக் கூழ் என அவர்களுக்கு பிடித்த உணவுகளை அளிப்பது, உண்ணும் ஆர்வத்தை அதிகரிக்க செய்யும்.

தானியங்கள், பயறு, பருப்புவகைகள், பழங்கள், காய்கறிகள் எனக் குழந்தைகளின் உணவுகளைத் திட்டமிட்டுத் தயாரித்து அளிக்க வேண்டும். புரதச்சத்து நிறைந்த மாமிச உணவுகள், சீஸ், போஞ்சி போன்றவற்றைக் கொண்டு தயாரித்த உணவுகளை அளிக்க வேண்டும்.

பாண், அப்பிள், சூப் போன்றவற்றை இரவு நேரங்களில் 'கலர்புல்லா'கத் தயாரித்து அளித்தால் குழந்தைகள் ஆர்வமுடன் சாப்பிடுவார்கள். குழந்தைகளின் வாய்க்குள் எந்த அளவுக்கு உணவு பிடிக்குமோ, அந்த அளவுக்கு மட்டுமே உணவுப் பொருளை வைக்க வேண்டும்.

அதிகமாகச் சாப்பிடவேண்டும் என்பதற்காக, அளவுக்கு அதிகமான உணவுகளைத் திணிப்பதால் தொண்டைக்குழியில் சிக்கி குழந்தைகள் சிரமப்படும். அதுவே உணவின் மீதான வெறுப்பை ஏற்படுத்தி விடும். புதிய வகை உணவுகளை அறிமுகப்படுத்தும் போது, குறைந்த அளவு கொடுத்து குழந்தைகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுகிறதா என்பதைக் கவனித்து, பின்னர் அதிகமாக அளிக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு வறுத்த, பொரித்த உணவுகளைக் கொடுப்பதைவிட, நார்ச்சத்துள்ள உணவுகளை அறிமுகப்படுத்தினால் வயிறு தொடர்பான நோய்கள் ஏற்படுவது தவிர்க்கப்படும். குழந்தைகள் இயல்பிலேயே வாயில் படும் பொருட்களை வெளியில் தள்ள முயற்சி செய்யும். நாளடைவில் அந்தப் பழக்கம் மாறிய பின்னர் உணவை விழுங்கத் தொடங்கும். அதனால், நாம்தா ன் பொறுமையாக உணவை அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டே மெதுவாக உணவு ஊட்ட வேண்டும். குழந்தையின் நாவில் உள்ள சுவை நரம்புகளுக்கு ஏற்ப, உணவை ருசியாகத் தயாரித்து அளித்தால், குழந்தைகள் உணவு உட்கொள் வார்கள். இன்னும் சில குழந்தைகளுக்கு, முதன் முறையாக கரண்டியால் உணவூட்டுவது பிடிக்காமல் போகலாம்; உணவைச் சாப்பிட மறுத்தால், நமது ஆள்காட்டி விரலை நன்கு சுத்தமாக கழுவி, அதில் உணவை சிறிய அளவில் தடவி குழந்தைக்கு கொடுக்கலாம்.

குழந்தைகளுக்கு கரண்டியால் உணவு ஊட்டும் போது, எச்சரிக்கையாக இருப்பது அவசியம். சிறு குழந்தைகள் மிக வேகமாக கையால் தட்டிவிடும். அப்போது குழந்தையின் வாயில் அல்லது முகத்தில், கரண்டி பட்டு காயம் ஏற்பட்டுவிட வாய்ப்பு உள்ளது. ஆகவே, பொறுமையாக, லாவகமாக, மென்மையாக உணவூட்டுவதே சரியானது.

- மஹி

## யாருக்குச்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு ஆட்சியாளர்கள் இஸ்ரேலைக் கைப்பற்ற முற்பட்டனர்.

1948 மே மாதம் 15ம் திகதி அரபு லீக் உறுப்பு நாடுகளான சிரியா, ஈராக், எகிப்து, ஜோர்டான் ஆகியவையும் புனிதப் போர்ப் படையும் அரபு விடுதலைப் படையும் புதிய இஸ்ரேல் நாட்டுக்கு எதிராகப் படையெடுத்தன.

இந்தப் போரின் போது பெத்தெலேகம் நகரை ஒரு பகுதியாகக் கொண்ட ஜெருசலத்தை ஜோர்தான் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

ஏப்பிரஹாம் என்பவரில் இருந்தே அரபுக்களும் யூதர்களும் தோன்றினார்கள். ஏப்ரஹாம் தனது மாற்றாந்தாய் மகளான சேராவைத் திருமணம் செய்தார்.

அதன் மூலம் பிறந்த ஒரு மகனான ஐசக்கின் வழித்தோன்றல்கள் யூதர்கள் எனப்படும் இஸ்ரேலியர்கள். ஏப்பிரஹாமின் இன்னொரு மனைவியின் மூலம் பிறந்த மகன் இஸ்மயிலின் வழித்தோன்றல்கள் அரபுக்கள் (Genesis 16:1d16). ஏப்பிரஹாமின் உண்மையான வாரிசு யார் என்பதில் அரபுக்களும் யூதர்களும் முரண்பட்டுக் கொள்கின்றனர். எல்லா அரபுக்களும் இஸ்லாமியர்கள் அல்லர். எல்லா இஸ்லாமியர்களும் அரபுக்கள் அல்லர்.

இஸ்லாம் தோன்ற முன்னர் கிறிஸ்த்தவம் தோன்றியது. கிறிஸ்த்தவம் தோன்ற முன்னர் யூதர்களின் மதம் தோன்றியது.

மற்ற இரு மதங்களுக்கு முன்னரே யூத மதம் ஜெருசலத்தைப் புனித நகராகக் கொண்டு விட்டது என்பது யூதர்களின் வாதம்.

ஜெருசலத்தின் முதலாவது யூத வழிபாட்டுத் தலம் கிறிஸ்துவிற்கு 957 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுவிட்டது. அதாவது இஸ்லாமிய மதம் தோன்றுவதற்கு 1579 ஆண்டுகளுக்கு முன்னர் யூதர்களின் வழிபாட்டுத்தலம் ஜெருசலத்தில் கட்டப்பட்டுவிட்டது.

மேலும் பலஸ்தீனம் என ஒரு நாடோ அரசோ ஒரு போதும் இருந்ததில்லை என்பது யூதர்களின் வாதம். அதே வேளை ஜெருசலம் என்பது எப்போதும் குழப்பத்தின் உறைவிடமாகவே இருந்து வருகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் 0.9 சதுர கிலோ மைல்களும் 1967ஆம் ஆண்டு 2.5 சதுர கிலோ மைல்களும் 2012ஆம் ஆண்டு 49 சதுர கிலோ மைல்களும் கொண்ட பிரதேசம் ஜெருசலம் நகராக இருக்கின்றது.

புனித குரானில் ஒரு இடத்தில் கூட ஜெருசலம் நகர் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

பைபிளில் அறுநூற்றிற்கு மேற்பட்ட இடங்களில் ஜெருசலம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெருசலம் நகரில் உள்ள Temple Mount என்பது யூதர்களால் கட்டப்பட்டது.

பின்னர் உதுமானியப் பேரரசு ஜெருசலத்தைக் கைப்பற்றி அங்கு சுவர்களை எழுப்பி மூன்று மதத்தினரும் வழிபடக் கூடிய ஏற்பாடு செய்யப்பட்டது. உதுமானியப் பேரரசு 4.5 கிலோ மீட்டர் நீளச் சுவரை ஒரு சதுர கிலோ மீட்டர் பிரதேசத்தில் எழுப்பியது. முதலாம் உலகப் போரின் பின்னர் ஜெருசலத்தைப் பிரித்தானியப் பேரரசு கைப்பற்றி அதை விரிவாக்கியது.

சிலுவைப் போரின் பின்னர் ஜெருசலத்தைக் கைப்பற்றிய கிறிஸ்த்தவர்கள் அங்கிருந்து யூதர்களையும் இஸ்லாமியர்களையும் விரட்டினர்.

ஆனால் 1187 இல் அதை மீளக் கைப்பற்றிய இஸ்லாமியர் அங்கு யூதர்களை மீளக் குடியேற அனுமதித்தனர். இரத்தக் களரியையே கடந்த காலமாகக் கொண்ட புனித நகரான ஜெருசலம் இனி வரும் காலங்களிலும் மூன்று புனித மார்க்கங்களில் இரத்தைக்கறை பூசும் என்பது நிச்சயம்.

## சீனாவில் சுதந்திரமான...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமர்த்தினார்கள்.

தமது சமுதாயத்தைப் பற்றிய தவறான கதைகள் பரப்பப் படுவதையிட்டு, மொசுவா மக்கள் பலர் எரிச்சலுற்றுள்ளனர்.

இருப்பினும், ஒரு சிலர் சுற்றுலாத்துறை கொண்டு வரும் வருமானத்தை இழக்கவும் விரும்பவில்லை. பாரம்பரியமாக பெண்கள் தலைமை தாங்கிய, அனைத்து முடிவுகளையும் எடுத்து வந்த மொசுவோ சமுதாயத்தில் எதிர்பாராத மாற்றம் உண்டானது. புதிதாகத் தோன்றிய முதலாளித்துவ பொருளாதாரம் காரணமாக, மொசுவா ஆண்கள் நன்மை அடைந்தனர்.

சுற்றுலா ஸ்தலங்களில், சேவைத் துறையில் உள்ள பல வேலைகளை பெண்களே செய்தாலும், ஆண்கள் தொடர்பாளர்களாகவும், முகவர்களாகவும் பணம் சம்பாதிக்கத் தொடங்கினார்கள்.

இருப்பினும் இத்தகைய பொருளாதார மாற்றமானது, அந்தப் பிரதேசத்தின் பின்தங்கிய வறுமையான கிராமங்களை மட்டுமே பாதித்து வருகின்றது. பெரும்பான்மையான மொசுவா பெண்கள், இப்போதும் வயலில் வேலை செய்து கொண்டே, பாரம்பரிய தாய் வழி குடும்ப உறவுகளை கட்டிக் காத்து வருகின்றனர்.

## சிறுகதை

# மணமாற்றம்

மிருசுவில் தமிழ்தாசன்

அந்த ஸ்டாஃப் ரூமே தஞ்சம் என அதற்குள்ளே அடைந்து கிடந்தாள் அம்பிகா ரீச்சர். பாடசாலைக்கு வந்ததே காலை ஒன்பது மணிக்குத்தான். இப்போது ஆறாம் வகுப்புக்குக் கணிதபாடம் கற்பிக்க வேண்டிய நேரம். ஆனால் அவளோ, பிள்ளைகளுக்குத் "தண்ணி காட்டி" விட்டு மெல்ல வந்து ஸ்டாஃப் ரூமுக்குள்ளே நுழைந்து விட்டாள்.

சுமார் நானூறு மாணவர்களைக் கொண்ட ஒரு சராசரிப் பாடசாலை. பதினைந்து ஆசிரியர்கள். ஒன்பது ஆசிரியைகளும் ஆறே ஆறு ஆண்களுமே கடைமையிலிருக்கின்றார்கள். ஆண்களை விடப் பெண்களின் தொகையதிகம் என்ற படியாலோ என்னவோ அங்கே பெண்களின் ஆதிக்கம் சற்று முன்னிலையில் நின்று கோலோச்சிக் கொண்டிருந்தது.

அதிபர் அருளம்பலம் மிகவும் நல்ல மனிதர். ஆனால் நல்ல அதிபரல்ல. நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது. சற்று வல்லவனாகவும் இருக்கவேண்டுமே. ஆளுமை போதாத நிர்வாகம். நல்ல அரசாட்சியில்லாத நாடு போன்றிருந்தது. மிக விரைவில் ஓய்வுபெறப்போகின்ற அதிபர் சில விடயங்களில் ஏனோ தானோ என்று நழுவிக் கொள்வதும் அங்கே சில ஆசிரியைகட்குச் சாதகமாயமைந்து கொண்டது.

"சரோ ரீச்சர்! நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ! இந்த விஷயத்திலை நாங்களெல்லாரும் ஒற்றுமையாக நிண்ட மெண்டால் உந்தச் சேர் மாரில்லை அந்த அதிபர்க் கிழட்டாலும் ஒண்டும் செய்யேலாது. எங்களை ஏதோ பெம்பிளையெண்டாப் போலை இளக்காரமாக நினைக்கினம் போலை. இதிலை நாங்கள் விடாப் பிடியாய் நிண்டு வெல்ல வேணும். சரியோ!

அம்பிகா ரீச்சரின் ஆலோசனையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டாள் சரோ ரீச்சர். இவர்களுடன் ஜெனி, பிலோமினா, கௌரி, காஞ்சனா என்றொரு ஆசிரியைகள பட்டாளமே அந்த ஸ்டாப் ரூமை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

"கதை ஒண்டும் வேண்டாம். இப்ப எங்களுக்கு உடனடியாக ஒரு ஸ்ராஃப் மீற்றிங்கைக் கூடி ஒரு நல்ல முடிவு சொல்ல வேணும்"

கௌரி ரீச்சர் நெற்றிப் பொட்டில் ஆணி அடித்தது போன்று தனது முடிவைத் தைரியமாக வெளியிட்டாள். கூடியிருந்த அத்தனை ஆசிரியர்கட்கும் தேனையும் பாலையும் கலந்து அதில் முக்கனிகளையும் சேர்த்துப் போதாதற்குச் சர்க்கரையும் இட்டு அப்படியே பருகிச் சுவைத்த மகிழ்ச்சி.

இராமாயணத்துக் கூனி ஒரேயொரு தடவை மட்டும் சூழ்ச்சி செய்தாள். ஆனால் இந்தக் கூனிகளிருக்கின்றார்களே! சதா சூழ்ச்சிக் கடலிலே மூழ்கி முத்துக் குளிக்கும் வித்தாரம் தெரிந்தவர்கள். இவர்கள் வகுப்பறைகளிலே இருக்கும் நேரத்தை விட இந்த ஸ்ராஃ ரூமிலே தங்கி நிற்கும் நேரமே அதிகமாயிருக்கும். ஆண்களுக்கெதிரான சவாலான வக்கிரத்தனமான திட்டங்களையே தீட்டிக்கொண்டிருப்பார்கள். ஆண்களை வம்புக்கிழுப்பதும் அவர்களுடன் முட்டிமோதி ஒரு பனிப்போர் செய்வதும் இவர்களுக்கு வேடிக்கை மிகுந்த பொழுது போக்குகள். எல்லாவற்றுக்கும் முக்கியமான மூலகாரணி மூளியலங்காரி போன்ற அம்பிகா ரீச்சரே!

அம்பிகாவுக்கு முப்பத்தைந்து முடிவடைந்தாலும் தற்போதும் ஒரு முதிர்கன்னியே! கல்யாணம் காட்சி என்று எல்லாமே கானல் நீராக அவளை விட்டுத் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தது. எட்டாப்பழம் புளித்ததோ என்னவோ! ஆணினத்தின் மீது ஒரு வக்கிரம். கொஞ்சம் கறுப்பாகவும் கொஞ்சம் சிவப்பாகவும் ஒரு இரண்டும் கெட்டான் நிறம். குட்டையான சுருண்ட கூந்தல். கண்கண்ட தைலங்கள் பூசியதால் வந்த வினையோ! அல்லது அவளுடைய உடல் வாசியோ யாரறிவார். மெல்லிய உடல்வாகு. வெள்ளைவேளேர் அழகான பல்வரிசை. சிரிக்கும் வேளைகளில் பார்க்கலாம். அவள் தான் அதிகமாகச் சிரிப்பதில்லையே! வாய்க் காலில் தங்கு தடையின்றி ஓடிக் கொண்டிருக்கும் நீரோட்டத்துக்குத் தடைக் கற்கள் எவையுமில்லாதிருந்தால் தான் பாத்திகள் நிரம்பும். இல்லை எனில் வாய்க்கால் அணையும் உடைந்து போவதுடன் பாத்திகளும் நீரின்றிக் காய்ந்து விடும். இவளுக்கும் திருமண வாழ்க்கை வாய்க்காத படியாலோ என்னவோ ஆண்களைச் சீண்டிப் பார்ப்பதும் வஞ்சிப்பதுமே அவளின் வாடிக்கை நிகழ்வுகளாகி விட்டன. பிறரைத் துன்பப்படுத்துவதால் எதுவித இலாபங்களையும் அடைவதுமில்லை. வீண் விரயங்களே!

"சொல்லுற மெண்டு குறை நினைக்காதேங்கே ரீச்சர். போன தவணையிலும் விளையாட்டுப்போட்டி அது இது வெண்டு வச்சதாலை பிள்ளையளின்ரை அடைவு மட்டம் நல்லாய்க் குறைஞ்சிட்டுது. இதுக்குள்ளை இப்ப ரூர் அது இது வெண்டு பிள்ளையளைக் குழப்பக்கூடாது" அதிபர் அருளம்பலம் அமைதியாகக் கூறினார். அம்பிகாவும் அவர் சக பாடிகளும் எதிர்பார்த்திருந்த ஸராஃப் மீற்றிங் களை கட்டத் தொடங்கியது.

"ஓம் ரீச்சர்! பெற்றார் வீண் குறை குற்றங்கள் சொல்லுவினம். இப்ப ரூருக்கு என்ன அவசரம்? அப்படி எண் டாலும் கடைசித் தவணைக்கு இதைப் பற்றி யோசிப்பம்" சிவகரன் சேரும் தனது பங்குக்கு இவ்வாறு கூறி விட்டு அமர்ந்து கொண்டார்.

"இப்ப பிள்ளையள் ரூர் கூட்டிக் கொண்டு போகச் சொல்லி உங்களைக் கேட்டதுகளே! சும்மா மூளையில்லாத வேலை பார்த்துப் போட்டு ஊர்ச்சனங்களோடை பிரச்சினைப்பட ஏலுமே!

உமாச்சந்திரன் சேர் வயதில் குறைந்தவர். வயதுக்கேற்ற வகையில் சற்று துடிப்புடன் பேசினார். இது அம்பிகா ரீச்சருக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. இன்றைய சச்சரவுக்கு அருமையான தொரு துருப்பு வாய்த்துக் கொண்டது அவளுக்கு.

" ஆருக்கு மூளையில்லை! கொஞ்சம் யோசிச்சுக் கதைக்க வேணும். சொல்லப் போனால் உங்கள் எல்லோரையும் விட நாங்கள் மூளை சாலியள். உங்களை விட கூடின படிப்புப் படிச்சுப் போட்டுத் தான் நாங்களுமிஞ்சை வந்திருக்கிறோம். பொம்பிளைகள் எண்டாப்போலை சும்மா மட்டந்தட்டிக் கதையாதையுங்கோ! நாங்களும் நெடுகத்தான் பார்க்கிறம்"

அம்பிகா ரீச்சர் இப்போது சண்டியை இழுத்துக் கட்டிக் சண்டித்தனப் பாணியில் வண்டியை நகர்த்தினாள். ஸ்டாஃப் மீற்றிங் கிட்டத்தட்ட எங்களுடைய இலங்கை நாடாளுமன்றக் கூட்டமாகியது. அமளிதுமளிகளுக்குப் பஞ்சமிருக்கவில்லை.



தனது மகன் பரதனுக்கு முடி சூட்டி இராமனைப் பதின்னாண்காண்டு கால வனவாசம் அனுப்பும் படி கைகேயி கேட்ட பொழுது தசரதன் தன்னிலை மறந்தான். கெஞ்சினான். அழுதான். புரண்டான். அவள் நினைத்திருந்தால் தன்னுடைய உடைவாளை உருவிக் கைகேயியை அந்த இடத்திலே துண்ட துண்டமாக வெட்டிச் சாய்த்திருக்கலாம். அவன் பொறுமையைக் கடைப்பிடித்தான். அவள் வழி நடந்தான். பெரியவர்க்கழகு பொறுமை எனும் அணிகலன். இதனால்த் தானே இராமாயண மென்னும் அருமையான தொரு இதிகாசம் பிறந்தது. இங்கேயும் அதிபரும் சக ஆசிரியர்களும் பொறுமையைக் கைக்கொண்டனர். ஏராளமான வாக்குகள் வித்தியாசத்தால் அம்பிகா கூட்டணியினர் வெற்றிவாகை சூடிக் கொண்டனர்.

"எனக்கு ரீச்சர்! சிவனொளிபாதம் பார்க்க வேணுமெண்டு கன நாளாய் ஆசை"

சேலை முந்தாணையைப் பிடித்துத் திருகியபடி பிலோமினா ரீச்சர்

"அதை விட அப்பா! நுவ ரெலியாவிலை அசோகவனம் பாக்கலாம்"

இது ஜெனி ரீச்சரின் ஆசை.

இவர்களின் ஆசைகளெல்லாம் ஓசியில் நிறைவேறப் போகின்றது. ஏழை மாணவர்களின் பணத்திலே சிவனொளிபாதத்துக்கும், அசோகவனத்துக்குத் சுற்றுலா போகின்றார்கள்.

அம்பிகாவுக்கு இவைகளொன்றிலும் ஆர்வமில்லை. ஆணினத்தை மட்டம் தட்டி அவர்களை தாழ்வு நிலைப்படுத்தி ஒரு பனிப்போர் புரிவதில் ஒரு ஆத்மார்த்தமான சுகம். அவ்வளவு தான். ஆண்கள் பெண்களைக் கட்டுப்படுத்த முடியாது. பெண்கள் என்றைக்குமே ஆண்களுக்கு சரிநிகர் சமனாம். வேண்டுமானால் ஆண்களை விட இன்னும் உயர்ந்தவர்கள். பெண்களை எந்தக் கொம்பனாலும் ஒன்றும் செய்து விட முடியாது. இதுவே அவளின். தீர்க்கமான முடிவு. கல்வெட்டில் பதித்தது போன்ற ஒரு இறுக்கமான கருத்து. இது ஒரு வித மன நோயாகவுமிருக்கலாம். கோடையில் மழை பொழிவதும், ஐப்பசி கார்த்திகையில் வரட்சி யினால் பூமி வரண்டு போவதும் நாயும் பூனையும் விளையாடுவதும், உலக்கையின் பிடியின் ஒலி கேட்டும் பாலை மரங்கள் பூத்துக் காய்ப்பதும் போன்ற இயற்கைக்கு முரணான எத்தன்னை நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் கலியுகத்தில் முப்பத்தாறு வயதில் ஒரு முதிர் கன்னி திருமணம் செய்து கொள்வது ஒன்றும் அத்தனை புதுமையானதல்ல.

சுந்தரமூர்த்தி சுந்தரவடிவினன். அம்பிகாவை விட ஆறு வயது குறைந்தவன். அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள். ஆணினத்தையே வெறுத்து ஒதுக்கி வாழ்ந்தவளின் நெஞ்சிலுமிப்போது காதல் அரும்பி அது கல்யாணமென்னும் முழு மலராக மலர்ந்தும் விட்டது.

கிரவலுமில்லாத புழுதியுமல்லாத அந்த வீதி! குண்டும் குழிகளுமாக சிதிலமடைந்து குஷ்டரோகியின் உடலாகத் தோற்றமளித்தது. டச்சுக் காரன் தன் தேசம் போன பின்பு யாருடைய கையும் படாத ஒரு கற்புடைய வீதி!

அதிபர் அருளம்பலத்தார் மெதுவாக சைக்கிளை விட்டிறங்கினார். வழியில் அம்பிகா ரீச்சரைச் சந்தித்தபடியால் அவளுடன் பேசாமல் போக முடியவில்லை.

"நானிப்ப நல்லாய் மாறீட்டன் சேர். ஆண்களை விடப் பெண்களே உசத்தியெண்டு இவ்வளவு காலமும் பிழையாக விளங்கீட்டன் சேர். ஒரு பெண்ணின்ரை வாழ்க்கையே ஆம்பிளையிலை தான் தங்கியிருக்கு. அவனில்லாத வாழ்க்கையிலை அர்த்தமேயில்லை. அவனை வெறுத்து வாழ நினைத்தால் அது கண்ணை வித்துச் சித்திரம் வாங்க நினைக்கிற கதையாகத்தானிருக்கும். இது எல்லாம் கலியாணத்துக்குப் பிறகு தான் விளங்கிச்சுது. உழைக்கிறது, குடும்பத்தைக் காப்பாற்றுவது நல்லது கெட்டதை அறிஞ்சு நடப்பது எல்லாமே ஒரு ஆம்பிளையாலை தான் முடியும். அவனிட்டை தான் ஆளுமையிருக்கும். என்ரை குடும்பப் பொறுப்பு முழுதையும் என்ரை புருஷன் தான் பொறுப்பெடுத்து நடத்துகிறார். நான் அவருக்குஅனுசரணை குடுத்தாலே போதும். வாழ்க்கை மகிழ்ச்சியாக ஓடிக் கொண்டிருக்கு. ஆம்பிளை ஆம்பிளை தான்" அம்பிகா சொல்லிக் கொண்டிருக்க அதிபர் தன்னை மறந்து சிரிக்கிறார்.

# நோய்களை குணமாக்கும் தண்ணீர்

நோய்களால் அவதிப்படும்போது மருத்துவரின் பரிந்துரையின் பேரில் பணம் கொடுத்து மருந்துகளை வாங்கி சாப்பிடுகிறோம்.

ஆனால், பணம் செலவழிக்காமல் நமக்கு ஆரோக்கியமான வாழ்க்கை தருவது தான் தண்ணீர்.

மனிதனின் உடல் உழைப்புக்கு ஏற்றவாறு நீர்ப்போக்கு ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு ஆண்கள் 3 லிட்டர் தண்ணீரும், பெண்கள் 2.2 லிட்டர் தண்ணீரும் அருந்த வேண்டும்.

தினமும், உடலுக்கு தேவையான அளவு தண்ணீரை எடுத்துக்கொள்வதன் மூலம், நம்மை எந்த நோய்களும் நெருங்கவிடாமல் தடுக்கலாம்.

1. காலையில் எழுந்ததும் பல் துலக்கும் முன்பே 160மிலி (4 டம்ளர்) தண்ணீர் அருந்துங்கள்.

2. பல் துலக்கி வாய் அலம்பிய பின் 45 நிமிடங்களுக்கு உணவோ, நீராகாரம் எதுவாயினும் உட்கொள்ளக் கூடாது.

3. 45 நிமிடங்களுக்குப் பின் வழமையான உங்கள் உணவை உட்கொள்ளலாம்.

4. காலை உணவுக்கு பின் 15 நிமிடங்களுக்கும், மதியம் மற்றும் இரவு உணவிற்கு பின் 2 மணி நேரங்களுக்கும் எதுவும் உட்கொள்ள வேண்டாம்.

5. முதியோர், நோயாளிகளால் ஆரம்பத்திலேயே 4 டம்ளர் நீரை அருந்த முடியாவிட்டால், கொஞ்சம் கொஞ்சமாக நீர் உட்கொண்டு நாளடைவில் 4 டம்ளர் அளவு நீர் அருந்த பழகலாம்.

எந்த நோய்க்கு எத்தனை நாட்கள் இந்த முறையை பின்பற்ற வேண்டும்:

உயர் இரத்த அழுத்தம் - 30 நாட்கள்., வாய்வுக்கோளாறுகள் - 10 நாட்கள்.

சர்க்கரை வியாதி - 30 நாட்கள், புற்றுநோய் - 180 நாட்கள்.

காசநோய் - 90 நாட்கள்.

இதனை பின்பற்றி வாழ்ந்தால் நோய்கள் குணமாகும்.

# நோயாளிகளின்...

( 17ஆம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் வைக்க முடியும். ஆனால் இது இங்கு கிடைப்பதை என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை

**புழுப் பிடித்தல்**

மேற்படி புண்களில் புழுப்பிடிப்பது மற்றொரு பெரும் தொல்லையாகும். புண்களின் இடையே புழுக்கள் நெளிந்து வளைந்து புரள்வதைக் காண மிகவும் பயங்கரமாகவும் அருவருப்பாகவும் இருக்கும். பெரும்பாலான நோயாளிகள் புழுக்கள் இருப்பதைக் கவனிப்பதில்லை. அருகில் உள்ள சருமத்தில் ஏதோ ஊர்வது போலிருக்கிறது என்று சிலர் சொல்வதைக் கண்டிருக்கிறேன். எனவே பராமரிப்பவர்கள் அவதானமாகப் பார்க்க வேண்டும்.

புண்களை மூடாது திறந்தபடி வைத்திருக்கும் போது அதில் இலையான் சென்று முட்டை இடுவதால்தான் இது நேர்கிறது. இதைத் தடுப்பதற்கு புண்களை மிகவும் சுத்தமாக வைத்திருப்பது அவசியமாகும். புண்கள் கழுவப்படும் படி தினமும் குளிப்பது அவசியமாகும். குளிக்க முடியாவிட்டால் சோப் போட்டு தினமும் புண்களை நன்கு கழுவ வேண்டும். இதன் பின்னர் புண்கள் திறந்திருக்காதபடி மூடி வைத்திருக்க வேண்டும்.

**சரி புழுப்பிடித்தால் என்ன செய்வது**

Tupentine oil வாங்கி அதை ஒரு ஊசி ஏற்றும் குழாயில் (Syringe) எடுத்து புண்ணின் முழுப் பகுதியிலும் சிதறப் பாய்ச்ச வேண்டும். 10 நிமிடங்கள் வரை காத்திருக்க ரேபன்டைனின் எரிச்சல் தாங்க முடியாது புண்ணினுள் மறைந்திருந்த புளுக்கள் வெளியே வரும். வெளியே வரும் அவற்றைக் கொழுக்கியால் பிடித்து சுடு தண்ணீரில் போட்டுக் கொல்ல வேண்டும்.

ரேபன்டைன் எரிச்சல் அடையச் செய்யக் கூடியது என்பதால் கண், மூக்கு காது போன்றவற்றில் படாதிருக்கும்படி கவனம் எடுக்க வேண்டும். வாயில்பட்டு விழுங்கவும் கூடாது. நஞ்சு அல்ல என்றபோதும் அவற்றை உறுத்தி வேதனையை ஏற்படுத்தும்.

ஒரே நாள் சிகிச்சையில் புழுக்கள் அனைத்தும் வெளியேறிவிடும் என எதிர்பார்க்க முடியாது. இச்சிகிச்சையை 2-3 நாட்களுக்குத் தொடர வேண்டும். அனைத்தும் வெளியேறிவிட்டாலும் மீண்டும் தொற்றக் கூடிய ஆபத்து இருப்பதால் புண்களை சுத்தமாகவும் மூடி வைத்திருப்பதையும் தொடர வேண்டும்.

**கெட்ட நாற்றப் புண்கள்**

கெட்ட நாற்றம் மற்றொரு பெரும் தொல்லையாகும். இது anaerobic வகை பக்றீரியா தொற்றுவதால் ஏற்படுகிறது.

இதைத் தடுப்பதற்கு தினமும் குளிப்பது அவசியமாகும். புண்களுக்கு மருந்து கட்டுவதற்கு முன் புண்களை நன்கு கழுவிக் குளிக்க வார்க்க வேண்டும்.

அதன் பின் புண்களை சேலைன் (Saline) கொண்டு சுத்தப்படுத்த வேண்டும். சேலைன் என்பது உப்புத் தண்ணீர். ஆனால் சாதாரண உப்புத் தண்ணீர் அல்ல. சரியான செறிவில் கிருமி நீக்கம் செய்யப்பட்டு தயாரிக்கப்படுவதாகும்.

இது தயாரிக்கும் முறையைப் பின்னர் கூறுகிறேன்.


புண்ணில் உள்ள ஈரத்தை ஒற்றி எடுத்துவிட்டு metranidazole மருந்தைப் போட வேண்டும். இது கிறீம் ஆகக் கிடைக்கிறது. ஆயினும் இத்தகைய புண்களுக்கு அந்த கிறீமின் செறிவு போதாது எனவே மெட்ரானைடசோல் மாத்திரையை வாங்கி அதைத் தூளாக்கி புண்ணின் மீது தூவுவது நல்ல பலனைக் கொடுக்கும்.

மணம் குணமாகும் வரை தினமும் இரண்டு தடவைகள் ஆவது அவ்வாறு சுத்தம் செய்து மருந்திட வேண்டும். ஈரம் கசிவது அதிகமானால் மேலும் அடிக்கடி மாற்றவும் நேரலாம்.

**இரத்தம் கசிவது**

புண்ணிற்கு மருந்திடும்போது அதிலிருந்து இரத்தம் சிந்த ஆரம்பிப்பது வீட்டில் மருந்து கட்டுபவர்களை கலங்க வைத்துவிடும். துணியை அல்லது கோஸ்சை வைத்து 10 நிமிடங்களுக்கு அவ்விடத்தை அழுத்திப் பிடித்தால் இரத்தம் கசிவது நின்றுவிடும்.

நின்ற பின் அந்த இடத்தை அழுத்தித் தேய்க்கக் கூடாது. தேய்த்தால் மீண்டும் இரத்தம் வெளியேறக் கூடும்.



மருந்து கட்டுவதற்கு முன் பழைய மருந்து கட்டை அவிழ்க்கும்போது அவதானமாகச் செய்தால் இவ்வாறு புண்களிலிருந்து இரத்தம் வருவதைத் தடுக்க முடியும். அவசரப்பட்டு பழைய மருந்தைப் பிரிக்கக் கூடாது. சேலைனை நன்கு ஊற்றி பழைய் கட்டு நன்கு ஊறிய பின்னர் மெதுவாகக் கழற்றினால் இரத்தம் வருவதைத் தடுக்கலாம்.

அடிக்கடி ரத்தம் கசியும் புண்களுக்கு Sucralfate என்ற மருந்தை வைத்துக் கட்டினால் இரத்தம் வருவதைத் தடுக்கலாம்.

வீட்டில் மருந்து கட்டுவதற்கு பன்டேஜ் துணியைத் தேடி அலைய வேண்டியதில்லை. சுத்தமான பருத்தித் துணி எதையும் உபயோகிக்கலாம்.

நன்கு சோப் போட்டு அலசிக் கழுவிச் சுத்தம் செய்து நல்ல வெயிலில் உலரப் போட்டு எடுக்க வேண்டும். இதைத் தேவைக்கு ஏற்ற துண்டுகளாக வெட்டி எடுக்க வேண்டும். பின்னர் நீராவியில் கிருமி நீக்கம் (sterilize) செய்ய வேண்டும். இடியப்பம் பிட்டு இட்டலி போன்றவற்றை அவிக்கும் எந்த ஸ்டீமரும் ஏற்றதே. கிருமி நீக்கம் செய்த பின்னர் அவற்றைப் பாதுகாப்பாக காற்றுப் புகாதவாறு சுத்தமான பெட்டியில் மூடி வைக்க வேண்டும்

ஏன் இந்தத் தொல்லை என மருந்தகங்களில் பண்டேஜ் வாங்கலாம். ஆயினும் அவை கிருமி நீக்கம் செய்யப்பட்டவை அல்ல என்பதை நினைவில் வைத்திருங்கள். முற் கூறியவாறு அவற்றையும் நீராவியில் கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.

**மருந்து கட்டுபவரின் சுத்தம்**

மருந்து கட்டுபவர் சுத்தம் பேண வேண்டும். மருந்து கட்ட முன்னரும் மருந்து கட்டிய பின்னரும் கைகளை நன்கு சோப் போட்டு சுத்தம் செய்ய வேண்டும்.

மருந்து கட்டி அகற்றிய துணி பன்டேஜ் பஞ்சு போன்றவற்றை வெளியே வீசி எறியக் கூடாது. அதிலுள்ள கிருமிகள் மற்றவர்களுக்கு பல்வேறு நோய்களை ஏற்படுத்தலாம். அவற்றை எரிப்பதே நல்லது.

**சேலைன் தயாரித்தல்**

மருந்து கட்டுவதற்கான சேலைன் என்ற உப்புத் தண்ணீர் தயாரிப்பது எப்படி

இரண்டு தேக்கரண்டி உப்பை ஒரு லீற்றர் தண்ணீரில் கரைக்க வேண்டும். அரை மணிநேரம் அதைக் கொதிக்க வைக்க வேண்டும். சுத்தமான போத்தலில் இதை விட்டு மூடி வைக்க வேண்டும்.

இவ்வளவும் தெரிந்திருந்தால் நினையுங்கள் உங்கள் வீட்டில் உள்ள அல்லது உங்களுக்கு தெரிந்த ஒருவரது அந்திக காலப் புண்களை வீட்டில் வைத்தே பாராமரிக்க முடியும்.

ஆயினும் ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அவசியமாகும்.

இலங்கை ஊடக பயிற்சி நிறுவனம்

SLMTI வெகுஜன ஊடக அமைச்சு

## புதிய தொடர்பு ஊடகக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள்!

இலங்கை தொடர்பு ஊடக நிறுவனம் (முன்பு இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்) புதிய தொடர்பாடல் கற்கைநெறிகளில் கல்வி புரிய விரும்பினோரிடம் விண்ணப்பிக்களை வேண்டி நிற்கின்றது. இலங்கையில் தொடர்பூடகங்ளின் வளர்ச்சியையும், ஒரு சிறந்த தேர்ச்சி பெற்ற தொழில்சார் ஊடகவியலாளரைம் வளர்ப்பதே எமது (SLMTI) இன் நோக்கமாகும். இதன் பேரில். தமிழில், சிங்களத்தில் மற்றும் ஆங்கிலத்தில் பல்வேறு வகைப்பட்ட டிப்ளோமாக்களையும், சான்றிதழ் படிப்புகளையும் நாம் வழங்குகின்றோம். தொடர்பு ஊடகங்களில் தேர்ச்சிபெற விரும்பியவர்களை மையப்படுத்தி, தொலைக்காட்சி. வானொலி, பத்திரிகை, இணையதள, ஊடகங்களில செயன்முறை பயிற்சி அளிக்கப்படும்.

### ஊடகக் கற்கைகள் டிப்ளோமா (DIPLOMA IN MEDIA STUDIES) தமிழில்- 1 வருடம்

தொடர்பு ஊடகங்களில் தேர்ச்சிபெற விரும்பியவர்களை மையப்படுத்தி, தொலைக்காட்சி. வானொலி, பத்திரிகை, இணையதள ஊடகங்கள், திரைப்பட தயாரிப்பு, ஆகியவற்றில் தொழில் ரீதியான கற்கை அளிக்கப்படும். இவற்றுள் தொழில் நுட்ப செயன்முறை பயிற்சியு'் (கமரா, எடிட்டிங், இயக்கம், நிகழ்ச்சி) விளம்பரம் தயாரித்தல், பத்திரிகை நுட்பங்கள், நிழற்படம் ஆகியனவும், செய்தி தயாரித்து வாசித்தல், அறிவிப்பு, நடிப்புக் கலை, ஒப்பனை போன்றவையும் அடங்கும். அநுபவம் வாய்ந்த ஊடகவியவியளாலர், பத்திரிகை ஆசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள், திரைப்படவியலாளர்கள், சர்வதேச நிபுணர்கள் ஆகியவர்களால் விரிவுரைகள், செயன்முறைகள் நடாத்தப்படும்.

பின்பற்றவிரும்புவோர், தாம் விண்ணப்பிக்கும் கற்கை நெறியின் தலையங்கம், தமது பெயர், வயது, கல்வித் தராதரம், ஊடகத் துறை அனுபவம் (அனுபவம் இருந்தால் மட்டும்), மற்றும், தேசிய அடையாள இலக்கம், தொலைபேசி இலக்கம், விலாசம் ஆகிய விபரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்து, சுய முகவரியிடப்பட்டு ரூ.5.00 முத்திரை ஒட்டப்பட்ட நீளமான தபாலுறையுடன் பின்வரும் முகவரிக்கு எதிர்வரும் ஜுலை 10 முன் கீழே காணப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும். விரும்பியோர் தரப்பபட்டிருக்கும் மின்னஞ்சலுக்கும் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம். அல்லது, SLMTI இணையதளத்தில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்ப பத்திரம் மூலமாகவும் (ஆங்கிலத்தில் மட்டும்) விண்ணப்பிக்கலாம்.


**தொடர்புகளுக்கு : 0112 674925, 0112 692602, 0112 674926,0112 685720**

Email: info@sltti.lk, info@slmti.lk, Web : www.sltti.lk, www.slmti.lk, Facebook : SLTTI, SLMTI

CHIEF EXECUTIVE OFFICER

SLMTI, No. 100 A, Sri Lanka Foundation Mawatha, Colombo 07

## ரம்ழான் பெருநாளை Whirlpool உடன் இணைந்து சிறப்பாக்குங்கள்



### மைக்ரோவேவ் அவன்கள்

சமையல் புத்தகம் ஒன்று **இலவசம்**



**மெஜிக்குக் 20S**
- 800W வழு
- 20L கொள்ளளவு
- டச் foil கட்டுப்பாடு
- குழந்தை பாதுகாப்பு

ரு.11,000

**மெஜிக்குக் 20G - க்றில்**
- 20L கொள்ளளவு
- 800W வழு
- க்றில் தொழிற்பாடு
- பல்வேறு நிலை சமையல்

ரு.13,000

**மெஜிக்குக் 20C - கன்வெக்சன்**
- 20L கொள்ளளவு
- 800W வலு
- கன்வெக்சன் தொழிற்பாடு
- பல்வேறு நிலை சமையல்

ரு.16,100

### குக்கர்



**ACM915TSWH**
- கேஸ் பனர் 4
- கேஸ் கிறில் உடன் கேஸ் அவன்
- டயிமர்
- அவன் அடுப்பு

ரு.77,200

விசேட விலை ரு.-61,700/-

### குக்கர் ஹுட்



**AKR601**
- ஸ்டேன்லஸ் ஸ்டீல்
- ச்சாக்கோல் பில்டர்
- 3 வேக கட்டுபாடுகள்
- 2 அடுப்புகள்

ரு.16,800

விசேட விலை ரு.13,400/-

*நிபந்தனைகளுக்குட்பட்டது

அழைப்புகளுக்கு 0714020799

நாடுமுழுவதும் அபான்ஸ் மற்றும் அபான்ஸ் அன்லிமிடட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்

Abans

| | | | |
|---|---|---|---|
| 10.5% (வ.வி.வீ : 8.81%) | 6.5% (வ.வி.வீ : 6.5%) | 5.5% (வ.வி.வீ : 5.61%) | 4.25% (வ.வி.வீ : 4.33%) |
| 5 வருடம் | 12 மாதங்கள் | 03 மாதங்கள் | 01 மாதம் |

## நிலையான வைப்புக்களுக்கு மிகச்சிறந்த வட்டி வீதம்

வருடாந்த விளைவு வீதம் - வ.வி.வீ

நிலையான வைப்புக்கள்

COMMERCIAL BANK

Fitch ரேட்டிங் - AA(lka)

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

+94 112 353 333 www.combank.lk



Grant McCann

ashok STEEL

நீடித்த வலிமை

## அசோக் TMT

### அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கு அறிமுகஞ்செய்கின்றோம் அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகள். தலைமுறைகள் தாண்டி நீடித்து நிலைத்து நிற்க உங்கள் வீடுகளுக்கும் அசோக் TMT இரும்புக் கம்பிகளை உபயோகித்து, முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.112,500 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832, வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு – 011 7388940-3

SLS 375








இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லான்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 ஜூலை 01ஆம் திகதி வெளியிடப்பட்டது.